இது ரகசியம் அல்ல!

எம்.பிக்களின் வருமானம் என்றால் சொல்லத் தேவையில்லை. ஒருபுறம் சட்டப்படி வருமானம் என்றால் மறுபுறம் இஷ்டப்படி வருமானம் உண்டு. அதுவும் அரசுத் தரப்பு – ஆளும் கட்சி – எம்.பிகள் என்றால் வருமானம் கொட்டோ கொட்டு

பக்கம் 03

பக்கங்கள்: 16
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | வைகாசி 23 புதன்கிழமை 06.06.2018 | கதிர் 212

## பெண் ஒருவர் சபாநாயகராக வரவேண்டும்



இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் பெண்ணொருவர் சபாநாயகராக நியமிக்கப்பட வேண்டுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த நிலையில் தமது பிரார்த்தனையும் அதுவாகவே இருக்கின்றது என்று சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதிய பிரதி சபா

பக்கம் 14

# பிரதிச் சபாநாயகர் பதவியும் ஐ.தே.க. கைக்குச் சென்றது

## ஆனந்த குமாரசிறி தெரிவாகினார்; சுதர்ஷினி தோல்வி



கொழும்பு, ஜூன் 07

நாடாளுமன்றப் பிரதிச் சபாநாயகராக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த குமாரசிறி பெரும்பான்மை வாக்குகளுடன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பிரதிச் சபாநாயகர் பொறுப்பிலிருந்து திலங்க சுமதிபால விலகியதை தொடர்ந்து, அந்தப் பதவிக்கு நிலவிய வெற்றிடத்தை நிரப்புவதற்கு நேற்று இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அந்தப் பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த குமாரசிறியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் சுதர்சினி பெர்னான்டோபுளேயும் முன்மொழியப்பட்டனர்.

பக்கம் 14

## சம்பந்தன், சுமந்திரனுக்கு நன்றி கூறினார் அங்கஜன்

கொழும்பு, ஜூன் 06

சக தமிழர் ஒருவர் பிரதிச் சபாநாயகராவைத் தடுப்பதற்கு அயராது உழைத்தமைக்குநாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா.சம்பந்தன், எம்.ஏ. சுமந்திரன் ஆகியோருக்கு மனமார்ந்த நன்றிகள்.

– இவ்வாறு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடா

பக்கம் 03

## மஹிந்தவின் திட்டம் இது

கொழும்பு, ஜூன் 06

தனது தலைமையிலான புதிய அரசு பதவியேற்றதும், 20 வீதத்தினால் வரியைக் குறைக்கப் போவதாக கூறியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அதிகளவு வரியினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களால் சரியாகச் சாப்பிட

பக்கம் 03

## அரசியல் முன்னேற்றம் நடக்கிறது ஆயினும் அது கட்சி ரீதியானதல்ல

### அடுத்த கட்டப் பயணம் குறித்து விக்கி தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 06

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தொடர்ச்சியாக இருப்பதா அல்லது அந்தக் கட்சியில் இருந்து வெளியேறுவதா என்பது குறித்து உரிய நேரத்தில் உரிய பதிலைக் கூறுவேன் எனத் தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், அரசியலில் தற்போது முன்னேற்றமான நடவடிக்கை ஒன்று இடம் பெறுகிறது. ஆயினும் அது கட்சி ரீதியானதல்ல என்றும் கூறினார்.

யாழ்.பொது நூலக மண்டபத்தில் தமிழ் மக்கள் பேரவையின் இளைஞர்

பக்கம் 14

## ரணில் – சம்பந்தன் சபையில் மோதல்

கொழும்பு, ஜூன் 06

பிரதிச் சபாநாயகர் தெரிவு தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தனும் மாறி மாறி சபையில் விவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வசம் இருந்த பிரதிச் சபாநாயகர் பதவி

பக்கம் 03

## பிணைமுறி விசாரணை அறிக்கையின் ஒரு பகுதி சபாநாயகரிடம் கையளிப்பு

கொழும்பு, ஜூன் 06

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் சி – 350 தொடக்கம் சி – 360 வரையான பக்கங்கள் அடங்கிய பிரதி ஜனாதிபதியின் செயலாளரால் சபாநாயகரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

பேர்ச்சுவல் ட்ரெசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளரான அர்ஜுன் அலோசியஸுடன் தொலைபேசியில் உரையாடியவர்க

பக்கம் 03

## 118 பேரின் பட்டியலால் சபையில் கடும் அமளி

அரசியல் களத்தில் பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ள பிணைமுறி மோசடியை மூடி மறைப்பதற்காக அர்ஜுன் அலோசியஸிடமிருந்து நிதிபெற்றனர் எனக் கூறப்படும் 118 பேரின் பெயர்ப் பட்டியல் விவ

பக்கம் 14

## கேப்பாபுலவில் படையினருக்கு காணி வழங்க 5 பேர் விருப்பம்



முல்லைத்தீவு, ஜூன் 06

கேப்பாபுலவில் படையினருக்குக் காணிகளை வழங்க 5 காணிகளின் உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

கேப்பாபுலவில் காணி

பக்கம் 14

## கோட்டாவின் திட்டத்துக்கு வாசுதேவ பலத்த எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 06

கோட்டாபய ராஜபக்ஷவின் வியத் மக திட்டத்துக்கு தாம் ஆதரவு அளிக்கவில்லை என்றும், அது தமது பாதை அல்ல என்றும், கூட்டு எதிரணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போது, எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

அண்மையில் நடந்த வியத் மக கருத்தரங்கின்

பக்கம் 14

## மாட்டுடன் மோ.சைக்கிள் மோதியதில் ஒருவர் சாவு

### வவுனியாவில் சம்பவம்



வவுனியா, ஜூன் 06

வவுனியாவில் வீதியில் சென்ற கட்டாக்காலி மாடு ஒன்றுடன் மோதி

பக்கம் 14

# இராணுவத்தினரின் பங்களிப்புடன் மரநடுகை யாழ். நகரில் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூன் 06

மரக் கன்றை நடுவோம் யுகத்தை ஆரம்பிப்போம் எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாண மாநகர எல்லையில் 4 ஆயிரம் மரக்கன்றுகளை நடும் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் கோட்டையை அண்மித்த பண்ணைக் கடற்கரை பூங்கா வளாகத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாநகர எல்லையில் இராணுவத்தினரின் பங்களிப்புடன் மரநடுகைச் செயற்றிட்டத்தை முன்னெடுக்கக்கூடாது என மாநகர சபையால் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில் இந்த நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகம், வடக்கு மாகாண விவசாய அமைச்சு மற்றும் யாழ் மாநகர சபை ஆகியன இணைந்து இந்த செயற்திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன், யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னொல்ட் மற்றும் வடமாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டு இந்தச் செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இராணுவத்தினரின் பங்களிப்புடன் இந்த நிகழ்வு இடம்பெற்றதுடன் இந்தச் செயற்றிட்டத்தினூடாக யாழ் மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுமார் நான்காயிரம் மரக்கன்றுகளை இந்த வாரத்தில் நடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் குணசீலன், இந்திய துணைத்தூதுவர் பாலசந்திரன், வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, ஆளுநரின் செயலாளர் சட்டத்தரணி இ.இளங்கோவன், யாழ் மாவட்ட அரச அதிபர்நாகலிங்கம் வேதநாயகன் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஐ-7)

# கேபிள் ரி.வி. முகவர் கைது

கரவெட்டி, கரணவாய் கிழக்கில் கேபிள் ரீ.வி. இணைப்பு வயரில் பாய்ந்த மின்சாரம் தாக்கித் தந்தையும் தனயனும் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் அந்தப் பகுதிக்கு கேபிள் ரீ.வி. இணைப்பை வழங்கும் முகவர் நெல்லியடிப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

கேபிள் ரீ.வி. இணைப்பு வயரைத் தொடுத்திருந்த இரும்புக் கம்பியின் ஊடாகவே மின்சார சபையின் உயர் அழுத்த மின்சாரம் பாய்ந்து இருவர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து கேபிள் ரீ.வி. இணைப்பு வழங்கும் முகவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது. அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரைக் கைது செய்யுமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கேபிள் ரீ.வி. இணைப்பு முகவரான கரணவாயைச் சேர்ந்தவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

கரவெட்டி, கரணவாய் கிழக்கில் கடந்த 23 ஆம் திகதி காலை கேபிள் ரீ.வி. இணைப்பு வயரை கையாண்டபோது மின்சாரம் தாக்கி தந்தையும் மகனும் உயிரிழந்தனர். மற்றொரு மகன் காயமடைந்தார்.

யாழ்ப்பாணம் நகரில் வானகம் அலைபேசி விற்பனை நிலையத்தை நடத்தும் ஜெகனாதன் (வயது-50), சஞ்சீவன் (வயது 29) ஆகிய இருவருமே உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரூபா 15 இலட்சம் பெறுமதியான சிகரெட்டுக்களுடன் ஒருவர் கைது

## குவைட்டிலிருந்து கொண்டுவரப்பட்டவை

கொழும்பு, ஜூன் 06

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட சிகரெட் தொகையுடன் நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



நேற்று அதிகாலை குவைட்டில் இருந்து வந்த சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சந்தேகநபரிடம் 14 இலட்சத்து 98 ஆயிரம் ரூபா பெறுமதியான 29,960 சிகரெட்கள் கைப்பற்றப்பட்டதாகச் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்பு, கொலன்னாவப் பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சுங்க அதிகாரிகள் விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இராணுவ அதிகாரிக்கு சொகுசு வீடு கட்டிய 12 படைச் சிப்பாய்கள் கைது

கொழும்பு, ஜூன் 06

வட்டுவ பிரதேசத்தில் இராணுவ உயர் அதிகாரியொருவருக்கு சொகுசு வீடொன்றை நிர்மாணிக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்த 12 இராணுவ சிப்பய்கள், இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டனர்.

இராணுவத்திலிருந்து அண்மையில் ஓய்வுப்பெற்றிருந்த இராணுவ உயர் அதிகாரியொருவரே, இராணுவச் செயற்திட்டமெனத் தெரிவித்து சொகுசு வீட்டை நிர்மாணிக்க இராணுவச் சிப்பாய்களைப் பயன்படுத்தியுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், இதன்போது கைது செய்யப்பட்டுள்ள இராணுவ சிப்பாய்கள் காலை 8 மணியிலிருந்து இரவு 10 மணிவரை அந்த சொகுசு வீட்டு நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# ஐக்கிய தேசியக் கட்சியின் உப தவிசாளராக மங்கள



கொழும்பு, ஜூன் 06

ஐக்கிய தேசிய கட்சியின் உப தவிசாளராக அமைச்சர் மங்கள சமரவீர நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினராகவும் அவர் செயற்படுவார் என்று அவரது நியமனக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஐந்து மாடுகள் மீட்பு

வவுனியா, ஜூன் 06

அனுமதியின்றிக் கொண்டு செல்லப்பட்ட 5 மாடுகள் ஓமந்தைப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.



வவுனியா, ஓமந்தை ஏ-9 வீதியில் வைத்து நேற்றுக் காலை இந்த மாடுகள் மீட்கப்பட்டுள்ளன.

உரிய அனுமதிப் பத்திரங்கள் எதுவுமின்றிப் புளியங்குளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கிச் சிறிய கப் ரக வாகனத்தில் 5 மாடுகள் கொண்டு செல்லப்பட்டன. இதனைச் சோதனை செய்த ஓமந்தைப் பொலிஸார் மாடுகளை மீட்டதுடன் வாகனத்தையும் அதன் சாரதியையும் கைது செய்துள்ளனர். (ஐ-100)

# மக்கள் வசிக்க வீடு, காணி இல்லை படையினருக்கு அவை தேவையா?

## சிவாஜிலிங்கம் காட்டமான கேள்வி

யாழ்ப்பாணம், ஜூன் 06

யாழ்ப்பாண மக்கள் காணிகள், வீடுகள் இல்லாமல் இருக்கின்றபோது படையினருக்குக் காணிகளும் வீடுகளும் இங்கு தேவைதானா எனக் கேள்வி எழுப்பிய வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அவ்வாறாக முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகளை நிறுத்தவேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்கள் தலைமையில் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றபோதே சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

யாழ். மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்களுக்கு காணிகளும் வீடுகளும் இல்லை. ஆனால் படையினர் தமக்குக் காணிகளை ஒரு புறம் சுவீகரிக்க மறுபுறம் வீட்டுத் திட்டங்களையும் பெறுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான நாவற்குழி காணியில் அரச உத்தியோகத்தர்களுக்கு வீடமைப்புத்திட்டமொன்று கொண்டு வரப்படுகின்றது. அரச ஊழியர்களுக்கும் பொது மக்களுக்கும் அத்தகைய வீடமைப்புக்களை வழங்கலாம். ஆனால் படையினருக்கோ



அல்லது விசேட அதிரடிப் படையினருக்கோ அங்கு வீடமைப்புத் திட்டங்களை வழங்க முடியாது. அதனை நாங்கள் எதிர்க்கிறோம்.

இந்த வீடமைப்பு அதிகார சபையானது தொடர்ந்தும் மக்களை ஏமாற்றி மக்கள் விரோதச் செயற்பாடுகளை முன்னெடுத்தால் வீடமைப்பு அதிகார சபையைத் தொடர்ந்து இயங்க விட முடியாது.

கொழும்பு சொல்வதையே அவர்கள் தொடர்ச்சியாக செய்து வருகின்றனர். இங்கு தொடர்ந்தும் அவ்வாறு செயற்படுவதை ஏற்க முடியாது என்பதுடன் படையினருக்கு வீடுகள் அமைக்கும் திட்டத்தை நிராகரிப்பதுடன் அதனைத் தடுத்து நிறுத்த வேண்டும்.–என்றார். (ஐ-7)

# தமிழரின் அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் விரைவில் இளைஞர் மாநாடு

## முதலமைச்சர் விக்கி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 06

தமிழ் மக்களின் அரசியல் கலாசார பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், வட – கிழக்கு மாகாண இளைஞர் யுவதிகளை ஒன்றிணைத்து, இளைஞர் மாநாடு ஒன்றை வெகுவிரைவில் நடத்த தீர்மானித்துள்ளதாக வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவையில் இளைஞர் யுவதிகளை உள்ளடக்கிய வேலைத்திட்டம் ஒன்றினை முன்னெடுக்கப் போவதாக வடமாகாண முதலமைச்சரும், தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவருமான சி.வீ.விக்னேஸ்வரன் கடந்த வாரம் நடைபெற்ற கூட்டத்தின்போது தெரிவித்திருந்தார். அதன்பிரகாரம், இளைஞர் மாநாடு ஒன்றினை நடத்துவதற்கான ஆரம்ப ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில், வடமாகாண முதலமைச்சரும், தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவருமான சி.வீ.விக்னேஸ்வரன் தலைமையில் நேற்று யாழ்.பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து வெளியிட்ட முதலமைச்சர், இளையோரைப் பலம் மிக்கவர்களாக ஆக்க இவ்வாறான ஒரு இளையோர் மாநாட்டை வெகுவிரைவில் தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நடத்த தீர்மானித்துள்ளோம். அந்த மாநாட்டில் எமது இளைய சமுதாயத்துடன் சேர்ந்து சில முக்கியமான விடயங்கள் கலந்தாலோசிக்கப்படவுள்ளது.

போருக்குப்பின்னரான எமது சமுதாயம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை, குறிப்பாக இளைஞர் யுவதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முதலில் இனங்கண்டு அதன்பின் அவற்றைத் தீர்க்க என்ன நடவடிக்கைகள் முன்னெடுக்க வேண்டும். அரசியல் ரீதியாக சர்வதேச நியமங்களுக்கு ஏற்றவகையில் எமது உரிமைகளைப் பெற என்ன செய்ய வேண்டும் என்பதை தொடர்பாக ஆராய உள்ளோம்.

அடுத்து எமது சமுதாயம் நிலைதடுமாறி, தவறி, பிறழ்வாக நடக்க எத்தனிக்கும் போது நாம் எவ்வாறு அவர்களைத் திரும்பவும் ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த ஒரு கட்டுக்கோப்புக்குள் கொண்டுவர முடியும். எமது தற்போதைய அரசியல் கலாசாரத்தை சீரமைப்பது எவ்வாறு என இளைஞர் யுவதிகளை எல்லாத் துறைகளிலும் வலுப்படுத்தல் எவ்வாறு என்று ஆராயப்படவுள்ளது.

அரசியல் ஞானம் பெற்று தற்போதைய அரசியல் கலாசாரத்தை மாற்றி அமைத்து எவ்வாறு எமது இனம் முன்னேற்றங்காண வேண்டும்.போருக்குப் பின்னர் எடுத்துக் கொண்ட அரசியல் நகர்வுகள் மற்றும் தமிழ் மக்களின் நீண்ட கால அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய விதத்தில் எமது அரசியல் நகர்வுகள் இருந்துள்ளனவா என்று ஆராயவுள்ளோம்.

எமது இளைஞர் யுவதிகள் அடுத்த தலைமுறைத் தலைவர்கள் என்ற விதத்தில் அவர்களுக்குப் போதுமான அரசியல் அறிவு, நிர்வாகச் செயல்திறன், நிதி முகாமைத்துவம் பற்றி போதிய அறிவை அவர்கள் பெறநாங்கள் இதுவரையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா என்பது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதுடன், அவ்வாறான வழிமுறைகள், பொறிமுறைகள் தயாரிக்காத படியால்தான் தமிழ் மக்கள் பேரவை உண்டாக்க வேண்டிய கட்டாயம் எமக்கு ஏற்பட்டது என்று எமது இளைஞர் சமுதாயத்திற்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

அத்துடன், தமிழ் மக்களின் அரசியல் என்பது பின்வரும் விடயப் பரப்புக்களை கொண்டிருக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அதன்பிரகாரம் பின்வரும் விடயங்கள் பற்றி ஆராய்ந்து அடுத்த கட்ட நகர்வுகளை நோக்கிய பயணிக்கவுள்ளோம்.

ஒன்று எமது நோக்குகளும் அபிலாசைகளும் அடையாளப்படுத்தப்பட வேண்டும். அவற்றில் எமக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். நம்பிக்கை உண்டாக்கப்பட வேண்டும். தேர்தல் விஞ்ஞாபனங்களில் எமது அபிலாசைகளை உள்ளடக்கிவிட்டு 'அவை ஏட்டுச்சுரக்காய்; சமைக்க உதவாது' என்ற கருத்திற்கு அமைவாக இருந்தால், எம் மக்களின் விடிவுக்கு நாம் வழி அமைக்க முடியாது.

எனவே, அடையாளப்படுத்தப்பட்ட எமது அபிலாசைகளை அடைய நாம் என்ன செய்ய வேண்டும் என்பது பரிசீலிக்கப்பட வேண்டும். பெரும்பான்மையினர் வலுவுற்றவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு எதிராகப் போராட முடியாது. ஏதோ கிடைப்பதை சற்று வலுவாக்கி எடுத்துச் செல்வோம் என்று எமது அரசியல் தலைவர்கள் நினைத்திருந்தால் அவ்வாறான சிந்தனைகள் சரியா தவறா என்பது பற்றி ஆராயவேண்டும்.

எமது அரசியல் கலாசாரம் ஒரு நேர்மையான அரசியல் கலாசாரமாக மாற்றமடைய என்ன செய்ய வேண்டும் என்று ஆராயப்படவுள்ளது. எமது இளைஞர் யுவதிகள் இந்த அரசியல் பவனியில் ஒன்றிணைய எதைச் செய்ய வேண்டும். நேர்மையான அரசியலொன்றை எடுத்துச் செல்வதானால் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் எமது சமுதாயத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் சில தீய பழக்கங்களை நாம் கைவிட என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும் சிந்தித்துச் செயலாற்றவுள்ளோம்.

கல்வி மேம்பாட்டை ஏற்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எமது ஆராய்ச்சிக்கு உட்படும். எமது சமுதாயம் பொருளாதார அபிவிருத்தி அடைய நாம் என்ன வேண்டும் என்பதை ஆராய இருக்கின்றோம். அடுத்து சமூகப் பிறழ்வுகளை எவ்வாறு ஒன்றுபட்டு களைய முடியும் என்பதை ஆராய்வோம்.

எமது இளைஞர் மாநாட்டில் எமது வடகிழக்கு மாகாணங்களில் மாவட்டங்கள், பிரதேசங்கள் தோறும் இளைஞர் அணிகளை உருவாக்குவது பற்றி ஆராய இருக்கின்றோம். அடுத்து அடையாளப்படுத்தப்பட்ட மக்கள் பிரச்சினைகளை இந்த இளைஞர் அணிகள் எவ்வாறு தீர்க்கலாம் என்பது பற்றி கலந்துரையாடி தீர்வுகளை எட்ட எண்ணியுள்ளோம்.

எமது இளைஞர் யுவதிகள் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்தெடுக்க வேண்டும் என்பதே எமது கரிசனை.

அரசியல், பொருளாதாரம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றில் ஒரு மறுமலர்ச்சியை கொண்டுவந்து இளைஞர் யுவதிகளை அந்த மறுமலர்ச்சிக்கான மையங்களாக மாற்ற வேண்டும்.

ஆகவே போருக்குப்பின்னரான எமது தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஆராய்தல், இளைஞர் யுவதிகளின் நடைமுறைப் பிரச்சினைகளை ஆராய்தல், தற்போதைய அரசியல், சமூக, பொருளாதார நிலையை ஆராய்தல், ஆராய்ந்து அடையாளம் காணப்படும் பிரச்சினைகளை எவ்வாறு தீர்த்தல், நீண்ட காலத் திட்டங்களை இதற்காக வகுத்தல், எமது இளைஞர் யுவதிகள் விழிப்போடு நடந்துகொள்ள வழிமுறைகளை ஆராய்ந்து பகிர்ந்து கொள்ளல், தமிழர்தம் விழுமியங்களையும் பாரம்பரியங்களையும் எமது இளைய சமுதாயத்தின் மனதில் உறைய வைத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் ஆராய்ந்து செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம் – என்றார். (ஜ)

### ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) யில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. எனவே நாமே மாற்று நபரை நியமிக்க வேண்டும். எமது தரப்பில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்னி பெர்னாண்டோபுள்ளேயின் பெயரை நாம் பரிந்துரைக்கின்றோம் என எதிர்க்கட்சி உறுப்பினர் தினேஷ் குணவர்தன குறிப்பிட்டார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய கூட்டு எதிரணி உறுப்பினர் தினேஷ் குணவர்தன, பிரதிச் சபாநாயகர் தெரிவில் இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றில் ஒரு முக்கிய அம்சமான விடயத்தை இன்று எம்மால் செய்ய முடியும்.

பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பிரதிச் சபாநாயகராக இதற்கு முன்னர் கடமையாற்றிய வரலாறு இருந்ததில்லை. எனவே இம்முறை அவ்வாறான ஒரு தீர்மானம் எடுத்து வரலாற்றில் பதிய முடியும்.

ஆகவே சபையின் சகல உறுப்பினர்களும் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேயுக்கு வாக்களித்து அவரை பிரதிச் சபாநாயகராகத் தெரிவு செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

குறுக்கிட்டுப் பேசி ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தன், தேசிய அரசு உருவாக்கப்பட்டதன் பின்னர் சபையினை வழி நடத்தும் விதத்தில் சபாநாயகர் ஐக்கிய தேசியக் கட்சியிலும், பிரதிச் சபாநாயகர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலும், குழுக்களின் பிரதித் தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து நியமிக்கப்படுவது என்ற இணக்கப்பாடு அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது.

இப்போது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வசம் இருந்த பிரதிச் சபாநாயகர் பதவி வெற்றிடமாகியுள்ள நிலையில் அவர்களின் ஒருவரை நியமிக்கின்றமையே முறையானது. அவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சார்பில் ஒருவரை நியமிக்கும் பட்சத்தில் நாம் அதற்கு பூரண ஆதரவை வழங்கத் தயாராக உள்ளோம் எனக் குறிப்பிட்டார்.

இதில் பேசிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க, தேசிய அரசாங்க நாம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நபர்கள் பிரதிச் சபாநாயகராக ஒருவரை தெரிவது என்றும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் சபாநாயகரைத் தெரிவு செய்வது என்றும் இணக்கப்பாடு இருந்ததை மறுக்கவில்லை. ஆனால் இந்த இரண்டு பதவிகளும் அரசின் சார்பில் நியமிக்கப்பட வேண்டிய பதவிகள்.

பிரதிச் சபாநாயகர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சார்பில் இருந்தாலும் கூட அவர்களும் ஆளும் கட்சியாக இருந்தனர். எனினும் இப்போது அவர்கள் எதிர்க்கட்சியில் அமர்ந்து கொண்டு மீண்டும் பிரதிச் சபாநாயகர் பதவி தமக்கு வேண்டும் எனக் கோருவது நியாயமற்ற காரணியாகும். பிரதிச் சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் ஆகிய இரண்டு பதவிகளை எதிர்க்கட்சியினருக்கு வழங்க முடியாது. ஆகவே அரசாங்க தரப்பில் இருந்து ஒருவரை நியமிக்க வேண்டும். இதில் வேறு வழிமுறைகள் எதுவும் இல்லை எனக் குறிப்பிட்டார்.

பிரதமரின் இந்தக் கருத்துக்கு எதிர்க் கருத்து கூறிய எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன், பிரதமர் கூறும் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. சில தினங்களுக்கு முன்னர் பிரதமர் என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசுகையில் பிரதிச் சபாநாயகர் குறித்து தெரிவித்திருந்தார்.

பின்னர் அவர் மனங்களில் வேறு எண்ணங்கள் எழுந்துள்ளன. இவ்வாறு மாற்றம் பெற முடி யாது. நியாயமாகப் பிரதிச் சபாநாயகர் பதவி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு வழங்கப்பட வேண்டும். அதுவே தேசிய அரசின் இணக்கப்பாடு. அதுவே சரியானது என நாம் கருதுகின்றோம். எனவே பிரதிச் சபாநாயகர் பதவியை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிக்கு வழங்கவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இரண்டு பொறுப்புகளை எதிர்க்கட்சிக்கு வழங்குவது அடிப்படையற்ற காரணியாகும். இணக்கப்பாடு என்னவாக இருந்தாலும் இப்போது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சார்பில் நியமித்துள்ள நபர்கள் எதிர்க்கட்சி ஆசனத்தில் உள்ளனர்.

ஆகவே எக்காரணம் கொண்டும் அவர்களுக்கு வழங்க முடியாது. மேலும் அரசின் சார்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ள நபர்களில் அனுபவம் மிக்க, நடை முறைகள் தெரிந்த ஒருவரை நியமித்துள்ளனர். ஆகவே அவரை நியமிப்பதே எமக்குள்ள ஒரே தெரிவாகும். இதில் தர்க்கிக்க முடியாது என ரணில் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் இரகசிய வாக்கெடுப்புநடத்த தீர்மானிக்கப்பட்ட போது பிரதான எதிர்க்கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியன வாக்களிப்பில் பங்கு கொள்ளாது வெளிநடப்பு செய்தன. (ஜ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) என்று கொட்டுவதற்று வழி வகைகள் ஏராளம்.

தந்திரசாலியான எம்.பிக்கள் சத்தம் சந்தடியின்றியே தங்கள் சாமர்த்தியத்தினால் குபேரராகி விடுவர்.

ஆளும்கட்சிஎம்.பிக்களுக்கு இந்த வகையில் பெரும் அதிர்ஷ்டம் அடிக்க இருப்பதாகக் கேள்வி. கொழும்புச் செய்தி வட்டாரங்கள் இத் தகவலை இப்போது கசிய விட்டிருக்கின்றன.

ஆளும் கட்சி எம்.பிக்கள் எல்லோரையும் பிரித்து இவ்வளவு பேர் இந்த அமைச்சைக் கண்காணிக்க என வகுத்து அமைச்சுக்கு இத்தனை கண்காணிப்பாளர்கள் என்று நியமிக்கும் திட்டம் ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன் வைத்திருக்கிறாராம்.

இந்த 'மொனிட்டர்' உத்தியோகம் சும்மாவல்லவாம்!

வழமையாக ஒவ்வொரு எம்.பியும் மாதாந்த வேதனம், எரிபொருள் அலவன்ஸ், ஊழியர் வேதனம், தொலைபேசி மற்றும் அஞ்சல் அலவன்ஸ் என்று ஏறத்தாழ 4 லட்சம் ரூபா வரை அறவிடுகின்றார்கள்.

இதற்கு மேலதிகமாகத்தான் ஆளும் கட்சித்தரப்பு எம்.பிக்கள் இந்த 'மொனிட்டர்' பொறுப்புக்கான வேதனம் – அலவன்ஸ் – பெறப்போகிறார்கள். இந்தக் கண்காணிப்பு வேலைக்காக மாதாந்த அலவன்ஸ் 75 ஆயிரம் ரூபா மற்றும் வாகன, அலுவலகச் செலவினம் உட்பட சுமார் மூன்று லட்சம் ரூபா 'பக்கேஜ்' கொண்டதாக அது இருக்குமாம்.

அப்படி என்றால் இனிமேல் அரசுத் தரப்பு எம்.பி. ஒவ்வொருக்கும் இனிமேல் சட்டப்படியான வருமானம் சுமார் ஏழு லட்சம் ரூபாவை எட்டும்.

கொடுத்து வைத்தவர்கள் தாம்! - மின்னல் -

### சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்.

பிரதிச் சபாநாயகராக அங்கஜன் இராமநாதனைத் தெரிவு செய்ய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்தது.

எனினும் அவரை நியமிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்காது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

அதனால் அங்கஜன் இராமநாதனின் பெயரை முன்மொழிவதிலிருந்து சுதந்திரக் கட்சிபின்வாங்கியது. முதலாவது பெண் பிரதிச் சபாநாயகராக நியமிக்கும் வகையில் சுதர்சினி பெர்னான்டோபுள்ளேயை சுதந்திரக்கட்சி முன்மொழிந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளேயை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்காது என அந்தக் கட்சி ஏற்கனவே அறிவித்திருந்தது. இதனடிப்படையில் ஐக்கிய தேசிய கட்சி தமது உறுப்பினர் ஒருவரையும் முன்மொழிந்து, அவரைப் பிரதிச் சபாநாயகராகவும் வெற்றி பெறச் செய்தது.

சுதந்திரக் கட்சி அங்கஜன் இராமநாதனை முன்மொழியாதபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுதர்சினி பெர்னான்டோபுள்ளேக்கு ஆதரவளிக்காமல் வாக்கெடுப்பிலிருந்து வெளியேறியது.

இந்த நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் இந்தக் கருத்தை நாடாளுமன்றில் தெரிவித்தார்.

### மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முடியவில்லை. பணத்தைச் சேமிக்க முடியவில்லை. அதிகளவுவரியே இதற்குக் காரணம்.

நாங்கள் அரசை அமைக்கும் போது, வரியை 20 வீதத்தினால் குறைப்போம். என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ)

### பிணைமுறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ளின் பெயர்ப் பட்டியல் இந்த வாரம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்திருந்தார்.

மத்திய வங்கி பிணை முறி மோசடி விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கையுடன் இணைக்கப்பட்டதாக இந்தப் பட்டியல் வெளியிடப்படும் என அவர் குறிப்பிட்டார்.

பிணைமுறி மோசடி தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகள் உள்ளிட்ட சில விடயங்கள் அடங்கிய அறிக்கையின் பிரதி முன்னர் நாடாளுமன்றில் முன் வைக்கப்பட்டது.

எனினும் மோசடியுடன் தொடர்புடையவர்கள் என ஆணைக்குழுவால் கண்டறியப் பட்டவர்களுக்கு எதிராகக் குற்றவியல் நடவடிக்கைக்குஎடுப்பதற்காக அறிக்கையின் ஒரு பகுதி பகிரங்கப்படுத்தப்படாமல் ஜனாதிபதியிடம் இருந்தது. அந்தப் பகுதியில் ஒரு பிரிவு தற்போது சபாநாயகரிடம் வழங்கப்பட்டுள்ளது. (ஜ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பழியைத் தவிர்க்க வழி!

தமது தற்போதைய பதவிக் காலத்தின் கடைசி ஆண்டை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

இலங்கையின் அரசமைப்பின் கீழ் ஆறு ஆண்டு கால பதவிக் காலம் ஒன்றுக்கே மக்கள் ஆணைபெற்று 2015 ஜனவரியில் அவர் பதவிக்கு வந்தார். அதன்படி 2021 முற்பகுதி வரை அவர் ஆட்சியில் தொடரமுடியும்.

எனினும், பதவிக்கு வந்த கையோடே தாமும் முன்னின்று ஆதரவு அளித்து, நிறைவேற்றச் செய்த அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் மூலம் தமது பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளில் இருந்து ஐந்து ஆண்டுகளாக அவர் குறைக்கச் செய்தார். தமது நிறைவேற்று அதிகாரங்களிலும் கணிசமானவற்றை வெட்டிக் குறைக்க இடமளித்தார்.

1978 இல் தற்போதைய அரசமைப்பு கொண்டு வரப்பட்ட பின்னர், தமது அதிகாரங்களை மேலும் மேலும் வலுப்படுத்திக் கொள்ளவே அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதிகள் முயற்சித்தனரே தவிர, குறைக்க முயலவேயில்லை.

அந்த வகையில் பதவிக்கு வந்த கையோடே தமது நிறைவேற்று அதிகாரத்தை கணிசமான அளவு குறைப்பதற்கான முன்முயற்சிகளை எடுத்து, அதற்கு ஆதரவு தந்து செயற்படுத்திய ஒரே ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன உள்ளார்.

அப்படி 19 ஆவது திருத்தத்தைத் தாமும் முன்னின்று கொண்டு வரச் செய்து நிறைவேற்றப் பண்ணியமையால் தான், தாம் நியமித்த பிரதமரை தாம் வீட்டுக்கு அனுப்ப முடியாத இக்கட்டை – அரசியல் நெருக்கடியை – தமக்குத் தாமே உண்டு பண்ணிக் கொண்டார் ஜனாதிபதி மைத்திரி.

ஆம், ஜனாதிபதி தாம் நியமித்த பிரதமரை தமது விருப்பப்படி பின்னர் மாற்றுவதற்கான உரிமையை – அதிகாரத்தை – இந்த ஜனாதிபதி தமது அனுமதியுடன் கொண்டு வந்த 19 ஆவது திருத்தம்தான் அவரிடமிருந்து பிடுங்கிக் கொண்டது என்பது தான் உண்மை.

இந்த 19 ஆவது அரசமைப்புத் திருத்தம்தான் 2020 இறுதி வரை – அல்லது 2021 ஆரம்பம் வரை – ஆட்சியில் இருப்பதற்கு மக்கள் ஆணை பெற்று தெரிவான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக் காலத்தை அடுத்த ஆண்டு இறுதியுடன் சுருங்கச் செய்து விட்டது. அடுத்த ஆண்டு நவம்பரில் நடைபெறும் அடுத்த ஜனாதிபதி தேர்தலை எதிர்கொண்டு அதில் வெற்றி பெற்றால் மட்டுமே அவர் பதவியில் தொடரமுடியும். அல்லது அடுத்த நவம்பரில் அவர் வீட்டுக்கு நடையைக் கட்ட வேண்டியதுதான்.

நாட்டில் நீண்ட காலம் புரையோடிப் போயிருக்கும் இனப் பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கியதான புதிய அரசமைப்பை ஏற்படுத்துவோம் என்ற வாக்குறுதியை வழங்கித்தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சி அரசுத் தரப்பினரும் பதவிக்கு –அதிகாரத்துக்கு – வந்தனர்.

ஆனால், அந்த முயற்சி , காத்திரமாக நகரவில்லை, முட்டுப்பட்டு, முடக்கப்பட்டுக் கிடக்கின்றது என்பதே இப்போது எல்லோரதும் குற்றச்சாட்டு.

அரசமைப்புப் பேரவையாக முழு நாடாளுமன்றமும் மாற்றப்பட்டமை, அரசமைப்புப் பேரவையினால் வழிகாட்டல் குழு நியமிக்கப்பட்டமை, வழிகாட்டல் குழு 75 தடவைகளுக்கு மேல் கூடி இடைக்கால அறிக்கையை தயாரித்தமை, அந்த இடைக்கால அறிக்கை மீது நாடாளுமன்றம் ஒரு வாரத்துக்கு மேல் நீண்ட விவாதம் நடத்தியமை, அரசமைப்பு உருவாக்க விடயங்களைக் கையாள்வதற்கு பல உபகுழுக்கள் அமைக்கப்பட்டு, அவை யாவும் தத்தமது அறிக்கைகளை முன்வைத்தமை என்று இந்த விடயத்தில் கணிசமான முன்னேற்றங்கள் இடம்பெற்றுவிட்டன என்பது உண்மைதான்.

இனி, அடுத்த கட்டம் புதிய அரசமைப்புக்கான வரைவு – நகல் – தயாரித்து முன்வைக்கப்பட வேண்டும். அதுதான் நிலுவையில் இருப்பது.

அதைச் செய்து நகல் யாப்பை – மாதிரி அரசமைப்பை – முன்வைப்பதற்கு சம்பந்தப்பட்ட நிபுணர்கள் தயார். ஆனால் அரசியல் தலைமைத்துவத்திடமிருந்து அதற்கான உத்தரவுகள் வழங்கப்படவில்லை என்பதுதான் அரசியல் களமுனைத் தகவல்கள் சுட்டிக்காட்டும் பிரச்சினை.


இன்றைய நிலையில் இத்தகைய அரசமைப்பு நகல் வடிவம் வெளிவராமல் முயற்சி தடைப்பட்டுப் போகுமானால், அந்த வரலாற்றுப் பழிக்குப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் யார் என்ற கேள்வியைத்தான் நாம் முன்வைக்கப் போகின்றோம்.

அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழுவே நகல் யாப்பு முன்வைக்காதமைக்கு பொறுப்பேற்க வேண்டும். அதற்குத் தலைமை தாங்கும் பிரதமர் மீதே அதற்கான பழி விழும். ஜனாதிபதி தப்பித்துக் கொள்வார் என்பதுதான் நிலைமை.

“எனது அதிகாரத்தையும் பதவிக் காலத்தையும் வெட்டிக் குறைப்பதற்குக் கூட முன்னின்று வழிசெய்தவன் நான். புதிய அரசமைப்பு உருவாக்கம் நாடாளுமன்றத்தின் பணி. நாடாளுமன்றம் தனக்குள்கூடி ஒரு நகலை – வரைவை – முன்வைத்தால் தானே நான் அதனை முன்நகர்ந்த நடவடிக்கை எடுக்க முடியும்? வெளிவராத வரைவை முன்நகர்த்தவில்லை என்று என் மீது யாரும் குற்றம் குறை கூற முடியாது? வெளிவராத வரைவை முன்நகர்த்தவில்லை என்று என்மீது யாரும் குற் றம் குறை கூற முடியாது” – என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை தன்னிலை விளக்கம் – வியாக்கியானம் – கூறக் கூடும்.

எனவே, புதிய அரசமைப்பு உருவாக்கம் தவறிப்போனமைக்கான வரலாற்றுப் பழி – குற்றச்சாட்டு – தம் மீது விழாதிருப்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதிப்படுத்த வேண்டு மானால், புதிய அரசமைப்புக்கான நகல் யாப்பை விரைந்து வெளியிட அவர் வழி செய்ய வேண்டும்.

# அழிவுகளில் இருந்து நாங்கள் மீண்டெழுந்து வருகின்றோம்



## வடக்கு கல்வி அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 06

நாங்கள் ஒரு சாதாரணமான நாட்டிலிருந்து சாதாரண சூழலிலிருந்து இந்தப் பதவிகளைப் பெற்றுக்கொள்ளவில்லை. பாரிய போர் ஒன்றை சந்தித்து அதன் அழிவுகளைத் தாங்கி அந்த அழிவுகளில் இருந்து மீண்டெழுந்து வருகின்றோம். எனவே எங்கள் எல்லோரினதும் கடமை இரட்டிப்பானது என வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார். .

நேற்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் வைத்து இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் 20 பேருக்கு பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் நியமனங்களை வழங்கிச் சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

30 ஆண்டுகள் கொடிய போருக்குப்பின்னரும் நாங்கள் மீண்டெழுகிறோம் என்றால் அது எங்கள் எல்லோரினதும் அயராத உழைப்பு என்றே சொல்ல வேண்டும். இன்று பிரதிக் கல்விப்பணிப்பாளர்களாக பதவியேற்கும் நீங்கள் அனைவரும் எமது மாகாணம் இலங்கையில் கல்வியில் முதலாம் இடத்திற்கு வருவதற்கு அயராது பாடுபட வேண்டும். ஒரு அமைச்சராக நானும் சரி எங்களுடைய அதிகாரிகளும் சரி ஆசிரியர்களும் சரி எங்கள் எல்லோருக்கும் தொடர்ச்சியான பொறுப்புக்கள் இருக்கின்றன. அந்த வகையில் உங்களுக்கும் உதவிக்கல்விப்பணிப்பாளர்கள் என்ற வகையில் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை நீங்கள் எந்தளவுக்கு வினைத்திறனாகச் செய்கின்றீர்களோ அந்தளவுக்கு எங்களுடைய மாகாணத்தை கல்வியில் உயர்த்த முடியும். ஆகவே நீங்கள் அனைவரும் வினைத்திறனுடன் செயற்பட வேண்டும்.

எங்கள் எல்லோருக்குமே குடும்பங்கள் இருக்கின்றன. எல்லோருக்குமே குடும்பப் பிரச்சினைகள் இருக்கின்றன சொந்தப்பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தச் சொந்தப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்து எங்களுடைய கடமைகளை நாங்கள் மறந்து விடக்கூடாது. சொந்தப்பிரச்சினைகள் கண்டிப்பாகத் தீர்க்கப்பட வேண்டும். அவற்றை நாங்கள் எவ்வாறு தீர்ப்பது என்பது பற்றி ஆலோசிக்கலாம். உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் நியமனங்களின் அடிப்படையில் நிர்வாக ரீதியாக ஏதாவது பிரச்சினைகள் இருப்பின் அவற்றை உடனடியாக தீர்த்து வைப்பதற்கு எங்களுடைய அதிகாரிகள் தயாராக இருக்கின்றனர். விடுதி வசதியோ அல்லது களப்பணியின்போது போக்கு வரத்து வசதியோ எதுவாயினும் அதனை தீர்ப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். அதே போல நீங்களும் உங்களுக்கு வழங்கப்பட்ட பணியினை முழுமையாக அர்ப்பணிப்புடன் செய்ய வெண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது உண்மையில் தனிப்பட்ட கடமையில்லை. ஒரு சமூகக் கடமை.

இவ்வாறான ஒரு கால கட்டத்தில் நாங்கள் அனைவரும் எம் சமூகத்திற்காக எமது சமூகத்தின் மீட்சிக்காக பாடுபட வேண்டும். – என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன்,கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன்,மாகாண கல்விப்பணிப்பாளர் உதயகுமார், கல்வி அமைச்சின் சிரேஸ்ட உதவிச் செலாளர்,நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் கல்வி அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் அனந்தராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ஐ)

# மாகாண தமிழ் தினப்போட்டியில் திடீரென மாற்றப்பட்ட முடிவுகள்

## மாகாண கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா?

வடமாகாணத் தமிழ்த் தினப் போட்டியில் அதிகாரிகள் தமது விருப்பத்துக்கு ஏற்ப முடிவுகளை மாற்றி வெளியிட்டு வருவதாக வவுனியா மாவட்ட ஆசிரியர்கள் பலர் குற்றம்சாட்டியுள்ளனர். இது தொடர்பாக வடமாகாணக்கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா எனவும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

வட மாகாணத் தமிழ்த் தினப்போட்டிகள் கடந்த சில ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வரும் நிலையில் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாணவாகள் போட்டிகளில் பங்குபற்றி வருகின்றனர்.

இந்நிலையில் 2018 ஆம் ஆண்டுக்கான மாகாணத் தமிழ் தினப் போட்டிகள் யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்றிருந்தன.

இதன்போது போட்டிகளின் முடிவுகள் போட்டி இடம்பெற்றுச் சிறிது நேரத்தில் விளம்பரப்பலகையில் அறிவிக்கப்பட்டிருந்தன. எனினும் மீண்டும் சில நாட்களின் பின்னர் முடிவுகள் மாற்றப்பட்டு வேறு பாடசாலைகளுக்கு முதலாமிடம் வழங்கப்பட்டுள்ளது.

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது என அறிவிக்கப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் அந்த முடிவுகளை மாற்றும் பின்புல சக்தி தொடர்பில் எமக்குச் சந்தேகம் எழுகின்றது. இவ்வாறு முடிவுகளை மாற்றும்போது காரணங்களை கூறாமல் செயற்படுவதானது மாணவர்களின் மனநிலையில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் பக்கச்சார்பான செயற்பாட்டினையும் வெளிப்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந் நிலையில் நாட்டார் பாடல் நிகழ்ச்சியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் போட்டியில் பங்குபற்றி அதிக புள்ளிகளைப் பெற்று முதலாமிடம் பெற்றதாகப் போட்டி இடம்பெற்ற அன்று மாகாண கல்விப்பணிப்பாளர் கையொப்பம் இட்டு முடிவுகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

எனினும் மாகாணக் கல்விப் பணிப்பாளரையும் மீறி முடிவு மாற்றப்பட்டு 04.06.2018 அன்று வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் முதல் மூன்று இடங்களுக்குள்ளும் இடம்பெறாத வகையில் முடிவு வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி முதலாமிடம் பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறு முடிவை மாற்றியவர் யார் என்ற சந்தேகம் பலமாக எழுந்துள்ள நிலையில் தமிழ்த் தினப்போட்டியின் நம்பகத்தன்மை மற்றும் நடுவர்களின் தகுதி என்பன ஆராயப்படவேண்டிய விடயமாகியுள்ளது.

எனவே இது தொடர்பாக கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர்எவ்வாறானநடவடிக்கையை எடுக்கப்போகின்றார் என்பது தொடர்பாக ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கரிசனை கொண்டுள்ளனர். (ஐ100)

## நாளை

07.06.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம் : பூரட்டாதி மாலை 6.44 வரை
திதி : அட்டமி மு.ப 8.56 வரை
சுபநேரம் : 7.22 – 8.52 வரை
இராகுகாலம் : 1.22 – 2.52 வரை

# சுற்றாடல் தின விழிப்புணர்வுக்கு நேற்று கிளிநொச்சியில் பேரணி







கிளிநொச்சி, ஜூன் 06

'மாற்றுக்களை தேடுவோம் பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனைகளை குறைப்போம்' எனும் தொனிப்பொருளில் உலக சுற்றாடல் தினமான நேற்று கிளிநொச்சியில் விழிப்புணர்வு பேரணி ஒன்று இடம்பெற்றது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வைத் தொடர்ந்து அங்கிருந்து கிளிநொச்சி டிப்போ சந்தி வரை மாணவர்கள் மற்றும் சூழலியலாளர்கள் பேரணி ஒன்றை நடத்தினர்.

இதில் பிளாஸ்ரிக்கினால் ஏற்படும் மாசுபாட்டை இல்லாதொழிப்போம், பொலித்தீன் பாவனையை தடுப்போம், காடழிப்பைத் தடுத்து சுத்தமான காற்றை சுவாசிப்போம் போன்ற வாசங்கள் எழுதப்பட்ட பதாகைகளை மாணவர்கள் ஏந்தியிருந்தனர்.

இந்த நிகழ்வை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடக்கு மாகாண அலுவலகமும், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சும் ஏற்பாடு செய்திருந்தன. (ஐ-70)

# சிங்களக் குடியேற்றங்களை தடுக்கத் தனிநபர் பிரேரணை

## எம்.பிக்கள், மாகாண உறுப்பினர்கள் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 06

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாகத் தமிழர் நிலங்களில் நடைபெறும் சிங்களக் குடியேற்றங்களை தடுத்து நிறுத்த அந்தத் திட்டத்தின் சட்டமூலத்தில் திருத்தம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைபெறுகின்ற அத்துமீறிய குடியேற்றங்களை தடுத்து நிறுத்துவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் நேற்று முன்தினம் வடக்கு மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் கலந்துரையாடியிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தவராசாவினால், மேற்படி மகாவலி திருத்தச் சட்டத்தில் சிறு திருத்தம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் வடக்கில் நடைபெறுகின்ற அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களை தடுத்து நிறுத்த முடியும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையில் மேற்படி திருத்தத்தை நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை மூலமாகவாவது கொண்டுவருவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்குத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் சம்மதம் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி வரைவு ஒன்றை உருவாக்கிப் பிரேரணையாகச் சமர்ப்பிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-7)





# உலக சுற்றாடல் தினம் நேற்று வவுனியாவில்

வவுனியா, ஜூன் 06

வவுனியா மாவட்ட செயலகம், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக்குழு என்பன இணைந்து ஏற்பாடு செய்த உலக சுற்றாடல் தினம் நேற்று மாவட்ட அரச அதிபரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் அமைந்துள்ள வளாகத்தில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப்பணிப்பாளர் எஸ்.சூரியகுமார் தலைமையில் இடம்பெற்றது.

'பிளாஸ்ரிக்கால் மாசுபடுதலை இல்லாது ஒழிப்போம்' எனினும் பொருளில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வவுனியா மாணவர்கள் பிளாஸ்ரிக் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துரைகளை வழங்கியிருந்தனர்.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் விதான பத்திரன, மேலதிக அரச அதிபர் த. திரேஸ்குமார், வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராசா, செட்டிகுளம் பிரதேச செயலாளர் எஸ்.சிவகரன், மாவட்டத் திட்டப் பணிப்பாளர், மாவட்டக் கணக்காய்வாளர், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், வவுனியா வளாக பல்கலைக்கழக இரண்டாம் வருட மாணவர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் அரச அதிபர் வாசஸ்தலத்தின் வளாகத்தில் அதிதிகள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களினால் மரக்கன்றுகள்நட்டு வைக்கப்பட்டன. (ஐ-100)

# சட்டவிரோத மீன்பிடியைத் தடுக்கும் பிரதேச செயலருக்கு அச்சுறுத்தல்

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 06

வடமராட்சி கிழக்கில் சட்டவிரோத மீன்பிடியைக் கட்டுப்படுத்த முயலும் பிரதேச செயலாளரை தென்னிலங்கையிலுள்ளவர்கள் இனத்துவேசமாகச் சித்தரித்து அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்கள் தலைமையில் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்றது. இதன்போது வடமராட்சி கிழக்கில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இதன்போதே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டது.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமெனச் சபையில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.



இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் இதனால் ஏற்படும் பாதிப்புக்கள், எதிர்கால அபாயங்கள் தொடர்பில் விளக்கினர்.

அதேபோன்று நீரியல் வளத் திணைக்களத்தினரும் தமது விளக்கத்தை அளித்தனர்.

இந்நிலையிலையே சட்ட ரீதியாகச் செயற்பட்டு வரும் பிரதேச செயலாளரை இனத்துவேசமாக தென்னிலங்கையிலுள்ளவர்கள் கருதுகின்றனர் என அரச அதிபர் தெரிவித்தார். அதேபோன்றே பல்வேறு அச்சுறுத்தல்கள் பிரதேச செயலருக்கு விடுக்கப்பட்டு வருகின்றன எனப் பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளரும் குறிப்பிட்டார். (ஐ-7)

# காணியற்றோரை பளையில் குடியேற்றுவதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 06

யாழ் மாவட்டத்தில் காணி இல்லாதவர்களுக்குப் பளையில் காணி வழங்கிக் குடியேற்றும் திட்டமொன்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போது மேற்படி திட்டம் முன்மொழியப்பட்டது.

யாழ். மாவட்டம் உட்பட வடக்கு மாகாணத்தின் பல இடங்களிலும் படையினரின் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதனைத் தடுத்து நிறுத்தவேண்டும். இங்குள்ள மக்களுக்கே காணிகள் இல்லாத நிலையில் படையினருக்கு எவ்வாறு காணிகளை வழங்க முடியும்.

யாழ்ப்பாணத்தில் மட்டும் 14 ஆயிரம் பேருக்குக் காணிகள் இல்லை. ஆகவே இவ்வாறு காணிகள் இல்லாதவர்களுக்கு பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பளையில் இருக்கும் காணிகளை வழங்க முடியும் என்று நடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் யோசனையொன்றை முன்வைத்தார். இதன்போது யாழ்ப்பாணத்தில் காணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வடக்கு மாகாண சபையும், திணைக்களங்களும் மாங்குளத்துக்கு நகரவேண்டும். அவ்வாறு சென்றாலே காணிப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என விவசாய அமைச்சர் சிவநேசன் குறிப்பிட்டார்.

இதன்போது குறிக்கிட்ட அமைச்சர் விஜயகலா மற்றும் சிறிதரன் எம்.பி. ஆகியோர் பளையிலுள்ள இந்தக் காணிகள் தொடர்பில் பகிரங்க விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்றும் அதற்கு வேறு யாரும் வர முன்னதாக இந்த மக்கள் சென்று குடியமரவேண்டுமென்றும் தெரிவித்தனர்.

ஆகவே யாழ்ப்பாணத்தில் காணியில்லாதவர்கள் பளையிலுள்ள அந்தக் காணிகளைப் பெற்றுக் கொள்ளலாமென்றும் அதனைப் பெற விரும்புகின்றவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

# மின்தடை

யாழ்ப்பாணம்,ஜூன் 06

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை–

**வவுனியா பிரதேசத்தில்** –மகாமயிலங்குளம், குடாகச்சக்கொடிய, துட்டுவாகை, தவ சிக்குளம் கிராமம், அட்டம்பஸ்கட கிராமம், பண்டாரிக்குளம் கிராமம், ஓமந்தை ஒரு பகுதி, குடாகச்சகொடிய கல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் – மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ

# கிளிநொச்சி மாவட்டத்துக்கு 5,592 மலசலகூடங்கள் தேவை

கிளிநொச்சி, ஜுன் 06

கிளிநொச்சி மாவட்டத்தில் 5592 மலசலகூடங்கள் தேவை எனக் கிளிநொச்சி மாவட்ட புள்ளிவிவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாவட்டத்தில் 2015 ஆம் ஆண்டு 11,254 மலசலகூடங்களும், 2016 ஆம் ஆண்டு 3,285 மலசலகூடங்களும், 2017 ஆம் ஆண்டு 563 மலசலகூடங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு 14,415 வீடுகள் வழங்கப்படவேண்டும் எனவும், இதில் 1376 வீடுகள் பகுதியளவில் புனரமைக்கவேண்டிய வீடுகள் எனவும் மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

# தினசரி ராசி பலன் (06.06.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் வைகாசித் திங்கள் 23 ஆம் நாள் புதன்கிழமை. ஸப்தமித்திதி பகல் 11.15 மணி வரை பின்னர் அஷ்டமி. நட்சத்திரம்: சதயம் இரவு 8.20 மணி வரை. பின்னர் பூரட்டாதி. சித்தயோகம் இரவு 8.20 மணி வரை பின்னர் அசுபயோகம்.

**ராகுகாலம்** - பகல் 12.09 மணி முதல் 1.43 மணி வரை.

**சுபநேரம்** - மாலை 4.23 மணி முதல் 5.53 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - வைகாசி மாத தேய்பிறை அஷ்டமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - சதயம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** இனிமையான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். சுப காரியத் தடைகள் விலகும். இழுபறியாக இருந்த பூர்வீகச் சொத்துக்கள் சுமுகமாகத் தீர்வாகும்.

**ரிஷபம்** சம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். எதிலும் அலட்சியமும், அவசரமும் கூடாது. பிறரை நம்பி ஒப்படைக்கும் பொறுப்புக்களால் பிரச்சினை உண்டாகும்.

**மிதுனம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். பதவியும் பாராட்டும் பணியிடத்தில் கிடைக்கும். நீண்ட காலக் கடன்கள் அடைக்கக் கூடியதாக பணவரவு இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும்.

**கடகம்** சஞ்சலமான நாள். மனதில் ஒரு வித கவலை உண்டாகும். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் குழப்ப நிலை காணப்படும். புதிய திட்டங்கள் எதையும் முறையாகத் திட்டமிடாமல் செயற்படுத்த வேண்டாம்.

**சிம்மம்** மத்திமமான நாள். வரவும், செலவும் சமமாக இருக்கும். கொடுக்கல், வாங்கலில் நேரடிக் கவனம் தேவை. இரவுப் பயணத்தைத் தவிர்க்கவும். வியாபாரம் சுமாரான லாபத்தைத் தரும்.

**கன்னி** உயர்வான நாள். வருமானம் உயரும். வெளிநாட்டு வர்த்தகம் சீராகும். குடும்பத்துடன் திருத்தல யாத்திரை மேற்கொள்ள யோகம் கிட்டும். வீடு வாகன யோகம் கிட்டும். ஆடை, ஆபரணப் பொருள் சேரும்.

**துலாம்** மகிழ்ச்சியான நாள். பொருளாதாரம் மன நிறைவைத் தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தடைப்பட்ட காரியங்கள் தடை விலகி சீராகும். சகோதர உறவு வலுவடையும்.

**விருச்சிகம்** சலனம் மிகுந்த நாள். மனச் சஞ்சலம் பயம் அதிகரிக்கும். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் சிறுசிறு கருத்து வேறுபாடுகள் உண்டாகும். தொழிலில் எதிர்பார்த்த லாபம் குறையும்.

**தனுசு** விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். குடும்ப உறவு மேம்படும். அலுவலகத்தில் ஆதரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த பதவி உயர்வுகள், ஊதிய உயர்வுகள் எல்லாமே கிட்டும்.

**மகரம்** இன்பமான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். இல்லத்தில் இனிமை நிலவும். விட்டுப்பிரிந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும். தடைப்பட்டிருந்த சுப காரியங்கள் சீராகக் கூடிய அறிகுறிகள் தென்படும்.

**கும்பம்** அதிர்ஷ்டமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்ப உறவில் அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்களால் ஆதாயம் கிட்டும். பூர்வீகச் சொத்துக்கள் கைக்கு வந்து சேரும்.

**மீனம்** குழப்பமான நாள். மனக் குழப்பம், சிந்தனை அதிகரிக்கும். பணவரவு குறையும். குடும்பத்தில் அமைதி குன்றும். நண்பர்களுடன் பகைமை உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் தடைகள் உண்டாகும்.

**சந்திராஷ்டம நாள்: புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# அரசியல் மயமாகி வருகிறது வடக்கு கல்விக் கட்டமைப்பு

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜுன் 06

வடக்கு மாகாணத்தின் கல்விக்கட்டமைப்பு முழுவதுமாக அரசியல்மயமாகிவருவது ஆபத்தானதாகும் என இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பில் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

வடமாகாணத்தில் கல்வி வலயங்களினதும் பாடசாலைகளினதும் நிர்வாகக் கட்டமைப்புக்களை சீர்குலைக்கும் வகையில் - அரசியல்வாதிகளாலும் ஒருசில கல்வி அதிகாரிகளாலும் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத செயற்பாடுகள் வடக்கில் தலைதூக்கியுள்ளன.

இதுவடமாகாணத்தின் கல்வி நிர்வாகக் கட்டமைப்புக்களையும் தாபன விதிகளையும் மீறி செயற்படும் முறையற்ற நிலைக்குச் சென்றுள்ளது.

இதைக் கவனிக்கவேண்டிய தலைமைகளும் பொறுப்பற்று செயற்பட்டு - தமது அரசியல் இருப்பை பலப்படுத்துவதையே முதன்மையாகக் கொண்டு செயற்படுவது கல்விச் சமூகத்தை நம்பிக்கை இழக்க வைத்திருக்கிறது.

அரசியல்பிரமுகர்களின் பிரத்தியேகச் செயலர்களால் இடமாற்றம் வழங்குவதும் - அதிபர்களை ஒன்றிணைத்து கூட்டங்களை நடத்த முயல்வதும் - பிரதேச நலன் எனக் கூறிக்கொண்டு ஒரு சிலரின் தனிப்பட்ட நலன்களைக் கவனிப்பதுமாக - வடக்கு மாகாணத்தின் கல்விக்கட்டமைப்பு முழுவதுமாக அரசியல்மயமாகி வருவது ஆபத்தானதாகும். இதனைத் தெரியப்படுத்தியும் - முறைகேட்டின் தாற்பரியம் உணராத அரசியல் வாதிகளின் அசமந்தம் - மிகமிக ஆபத்தானதாகும்.

சில கல்வி வலயங்களில் - ஓய்வுபெற்ற கல்விநிர்வாக சேவை உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் வடமாகாண கல்வியமைச்சு நியமித்துள்ளது. பிரச்சினைகள் ஏற்படும்போது சட்ட ரீதியாகப் பொறுப்புக்கூற அவசியமற்ற இவ்வாறானவர்கள் வலயக்கல்விப் பணிப்பாளருக்கும் கட்டுப்படாதவர்களாகக் கல்வி வலயங்களில் குழப்பங்களை ஏற்படுத்துகின்றனர். தமது தனிநபர் நலன்களுக்காக அந்தப் பிரதேசத்தின் கல்வியை சீர்குலைக்க முயல்வதும் எம்மால் அவதானிக்கப்பட்டுள்ளது.

தற்போது வடமாகாணத்தில் போதிய கல்விநிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் உள்ளநிலையில் ஒப்பந்த உத்தியோகத்தர்களின் ஒப்பந்தங்களும் முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும்.

வடக்குமாகாணத்தின் கல்வி கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள முறைகேடுகளை நிவர்த்தி செய்ய - சம்பந்தப்பட்டவர்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும். - என்றுள்ளது. (ஐ)

# வவுனியாவில் ராணுவ ஜீப் மோதி 2 சிறுவர்கள் உட்பட 4 பேர் காயம்



வவுனியா, ஈரற்பெரியகுளம் பகுதியில் சைக்கிளில் சென்ற இரண்டு சிறுவர்கள் சமநிலை தடுமாறி வீதியின் குறுக்கே பயணித்தபோது அவர்கள் மீது மோதுவதைத் தவிர்ப்பதற்கு முயன்ற இராணுவ ஜீப் இருந்த மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

இதில் சிறுவர்கள் இருவரும், இராணுவத்தினர் இருவரும் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணை களை ஈரற்பெரியகுளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ -100)

# தனியார் மருந்தக களஞ்சியத்தில் தீ

வவுனியா வைரவப்புளியங்குளத்தில் அமைந்துள்ள தனியார் மருந்துக் களஞ்சியத்தில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. நகரசபை தீயணைப்புப் பிரிவினரின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 9.15 மணியளவில் இந்தத் தீ விபத்து இடம்பெற்றது.

வவுனியா, வைரவப்புளியங்குளம், இராசதுரை வீதியில் அமைந்துள்ள இராசையா மருந்தகத்தின் உரிமையாளரின் இல்லத்தில் உள்ள மருந்தகக் களஞ்சியத்தில் திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து நகரசபையின் தீயணைப்புப் பிரிவினருக்கு அறிவித்ததையடுத்து அவர்களின் உதவியுடன், வவுனியாபொலிஸாரும் இணைந்து சுமார் 30 நிமிடங்களாகப் போராடி தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

களஞ்சியசாலையில் ஆயுள்வேத மருந்து தயாரித்துக் கொண்டிருந்தவேளை, இந்தத் தீ விபத்து ஏற்பட்டதாக சம்பவ இடத்தில் நின்றவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ - 100)

# கடத்தப்பட்ட முதிரைக் குற்றிகள் ஓமந்தைப் பொலிஸாரால் மீட்பு



வவுனியா, ஓமந்தைப் பகுதியில் கடத்தப்பட்ட பெறுமதியான முதிரை மரக்குற்றிகளை ஓமந்தைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

நேற்றுக் காலை இந்த முதிரை மரக்குற்றிகள் ஓமந்தை, நொச்சிமோட்டை, சின்னக்குளம் வீதியில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளன.

ஓமந்தைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து ஓமந்தை, நொச்சிமோட்டை, சின்னக்குளம் பகுதியில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.ஜே.எஸ். பொன்சேகாவின் வழிகாட்டலில் ஓமந்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுரேஸ் த சில்வா தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே சிறிய ரக பிக்கப் வாகனம் ஒன்றில் ஏற்பட்ட 10 முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் பொலிஸாரின் வருகையையடுத்து அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

இது குறித்து ஓமந்தைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ - 100)

# தியாகி சிவகுமாரனின் நினைவேந்தல் அனுஷ்டிப்பு






யாழ்ப்பாணம், ஜூன் 06

தமிழ் இனத்தின் விடுதலைக்கான முதல் தற்கொடையாளர் தியாகி பொன்னுத்துரை சிவகுமாரனின் 44ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்றுச் செவ்வாய்க்கிழமை உரும்பிராயில் உள்ள சிவகுமாரனின் நினைவிடத்தில் இடம்பெற்றது.

தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்.

தமிழின ஒடுக்குமுறைக்குச் சிங்கள தேசம் வித்திட்டு கல்வி தரப்படுத்தலை கையில் எடுத்த வேளையில் அதனை எதிர்த்து தமிழினப் புரட்சிக்கு வித் திட்டவர் தியாகி பொன். சிவகுமாரன்.

தமிழ் இனத்தின் விடுதலைக்கான களச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தபோது, 1974 ஆம் ஆண்டு ஜூன் 5ஆம் திகதி பொலிஸாரின் சுற்றிவளைப்பில் சிக்கி சயனைட் அருந்தி பொன்.சிவகுமாரன் (வயது-24) சாவடைந்தார். (ஐ-7)

# கேபிள் ரி.வி. வயர்களை அகற்றியது மின்சார சபை



யாழ்ப்பாணம், ஜூன் 06

வடக்கு மாகாணத்தில் மின் கம்பங்களில் இணைக்கப்பட்டுள்ள கேபிள் ரி.வி. இணைப்பு வயர்களை அகற்றுமாறு இலங்கை மின்சார சபையின் தலைமையகம் வடபிராந்திய அலுவலகத்துக்குப் பணித்துள்ளது. அதற்கமைய கேபிள் ரி.வி. இணைப்பு வயர்களை அகற்றும் பணிகளை மின்சார சபை ஊழியர்கள் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை ஆரம்பித்தனர்.

இலங்கை மின்சார சபையின் இந்தத் திடீர் நடவடிக்கையால் கேபிள் ரி.வி. வாடிக்கையாளர்கள், தொலைக்காட்சி அலைவரிசைகளைப் பார்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் பல இடங்களில் மின்சார சபையின் மின் கம்பங்கள் ஊடாக கேபிள் ரி.வி. இணைப்பு வயர்கள் செல்கின்றன. இந்த நடவடிக்கைக்கு மின்சார சபை துணை நிற்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தநிலையில்வடக்குமாகாணத்தில் மின் கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ள கேபிள் ரி.வி. வயர்களை அகற்றும் பணிகளை நேற்றுக் காலை முதல் முன்னெடுக்குமாறு மின்சார சபையின் தலைமையகம், வடபிராந்திய அலுவலகத்துக்கு நேற்றுமுன்தினம் பணிப்புரை விடுத்தது.

கேபிள் ரி.வி. இணைப்பு வழங்குவதற்காக தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உரிமம் பெற்றவர்களுக்குக் கட்டண அறவீட்டுடன் இணைப்பு வயர்களை மின் கம்பங்கள் ஊடாகக் கொண்டு செல்வது தொடர்பில் உரிய செயற்றிட்டம் தயாரிக்கப்படும் வரை இடைநிறுத்துமாறு அரசியல் தலைமையால் பரிந்துரைக்கப்பட்டபோதும் மின்சார சபை தனது தீர்மானத்தில் உறுதியாக உள்ளது. (ஐ)

# மாவாவுடன் கைதான சந்தேகநபர் எங்கே?

## யாழ். நீதிமன்று சிறப்புக் கவனம்

யாழ்ப்பாணம், ஜூன் 06

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரால் நியமிக்கப்பட்ட போதைப் பொருள் சிறப்புப் பொலிஸ் அணியால் மாவா போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவர் யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்தப்படாத விவகாரம் தொடர்பில் நீதிமன்று சிறப்பு கவனம் செலுத்தியுள்ளது.

அதுதொடர்பில் நீதிமன்றின் உத்தரவில் அறிக்கை ஒன்றை யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மன்றில் நேற்றுமுன்தினம் சமர்ப்பித்தார்.

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் பாவனையை ஒழிப்பது என்ற தொனிப்பொருளில் கடந்த மே 31ஆம் திகதிவரையான காலப் பகுதியில் வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரால் சிறப்புப் பொலிஸ் பிரிவு ஒன்றை அமைத்தார்.

போதைப் பொருள் விற்பனை மற்றும் பாவனை தொடர்பில் பொதுமக்கள் தகவல் வழங்கும் வகையில் தொலைபேசி இலக்கம் ஒன்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் யாழ். மாநகர சபைக்குட்பட்ட சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையிலான பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள ஆய்வுப் பணியில் ஈடுபட்டிருந்த போது, மாணவர்களுக்கு மாவா போதைப் பொருள் விற்பனை செய்யப்படும் இடமொன்று தொடர்பில் பொது மக்களால் தகவல் வழங்கப்பட்டது.

அந்தத் தகல் யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியால் சிறப்புப் பொலிஸ் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் தேடுதலில் ஈடுபட்ட பொலிஸார் ஒரு தொகை மாவா போதைப் பொருள் 5 உரப் பையிலிடப்பட்ட நிலையில் கைப்பற்றினர். அவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

மாவா போதைப் பொருள் பொதிகளையும் சந்தேகநபர்களையும் பொலிஸார் தமது வாகனத்தில் ஏற்றிச் சென்றதைச் சுகாதார மருத்துவ அதிகாரி உள்ளிட்டவர்கள் அவதானித்தமையுடன், அந்த நடவடிக்கையை ஒளிப்படங்களையும் எடுத்திருந்தனர்.

சம்பவம் இடம்பெற்ற மறுநாள் மாவா போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவேறு வழக்குகளில் 2 சந்தேகநபர்கள் மன்றில் முற்படுத்தப்பட்டனர். ஆனால் சுகாதார மருத்துவ அதிகாரியின் தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மன்றில் முற்படுத்தப்படவில்லை. அவரிடம் மீட்கப்பட்ட மாவா போதைப் போருள் தொடர்பிலும் நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்படவில்லை.

இது தொடர்பில் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இந்த நிலையில் இந்த விவகாரத்தில் சிறப்புக் கவனம் செலுத்திய யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று, பொலிஸாரிடம் விளக்கம் கேட்டிருந்தது. அதனையடுத்து மாவா போதைப் பொருளைத் தயாரிக்கும் புகையிலை உள்ளிட்ட மூலப்பொருள்கள் அடங்கிய 2 உரப் பை பொதிகளைப் பொலிஸார் கடந்த வாரம் மன்றில் முன்வைத்தனர்.

மேலும் அதுதொடர்பில் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேற்று முன்தினம் மன்றில் முன்னிலையாகி அறிக்கை ஒன்றை முன்வைத்தார். அதனால் வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

# அமெ. உயர் பதவிகளுக்கு 2 ஈழத் தமிழர்கள் போட்டி



நியூயோர்க், ஜூன் 06

அமெரிக்காவின் மேரிலன்ட் மாகாணத்தின் இரண்டு முக்கிய பதவிகளுக்கு, உடன் பிறந்தவர்களான இரண்டு தமிழர்கள் போட்டியிடுகின்றனர் என்று பால்ரிமோர் மகசின் என்ற ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

மேரிலான்ட் மாகாண ஆளுநர் பதவிக்கு, கிரிசாந்தி விக்னராஜா என்ற பெண் போட்டியிடுகிறார். அவரது சகோதரரான திரு எனப்படும் திருவேந்திரன், அதே மாகாணத்தின், பால்ரிமோர் நகர அரசசட்டவாளர் பதவிக்குப் போட்டியிடுகிறார்.

கிரிசாந்தி முன்னர் வெள்ளை மாளிகையில் மிச்சேல் ஒபாமாவின் கொள்கைப் பணிப்பாளராக இருந்தவர். கிரிசாந்தியும் அவரது அண்ணன் திருவும், குழந்தைகளாக இருந்தபோது, அவரது பெற்றோர், இலங்கையிலிருந்து போரினால் புலம்பெயர்ந்து, பால்ரிமோர் நகரில் குடியேறினர்.

இவர்களின் பெற்றோர் பால்ரிமோர் நகரப் பாடசாலையில் ஆசிரியர்களாகப் பணியாற்றினர். ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்ற திரு, 'ஹவார்ட் லோ ரிவியூ' இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

அவரது சகோதரியான கிரிசாந்தி யேல் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானம் படித்தார். இவர்கள் இருவரும் இப்போது மேரிலான்ட் மாகாணத்தின் இரண்டு முக்கியமான பதவிகளுக்காக ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடுகின்றனர்.

# இடம்பெயர்ந்தோர் உதவிகள் பெற பதிவு செய்வதற்கான காலம் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 06

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்கள் உட்பட வெவ்வெறு இடங்களில் தங்கியிருப்போர் மற்றும் மீள்குடியமர்ந்தோர் தமக்கான வீட்டுத்திட்டம் போன்ற உதவித் திட்டங்களைப் பெறுவதற்கு பதிவு செய்யப்பட வேண்டிய காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில்வலி. வடக்கு பிரதேச சபையின் தலைவர் சுகிர்தன் தெரிவித்தவை வருமாறு:

1990ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்கள் மற்றும் வெவ்வேறு பகுதிகளில் குடியமர்ந்துள்ள மக்களுக்கும் அண்மையில் மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்கும் வீட்டுத் திட்டம் மற்றும் உதவிப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

அதற்கான பதிவுகளை கடந்த மே 31ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது அந்த கால எல்லை வரும் 30ஆம் திகதி வரை ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

எனவேவலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தற்போது தங்கியிருக்கும் பகுதி கிராம அலுவலகர் ஊடாக அந்த அந்தப் பிரதேச செயலகங்களில் தமது பதிவுகளை முன்னெடுக்க முடியும் – என்றார். (ஐ)

# பிளாஸ்ரிக்கின் பிடியில் பூமி!

## தாய்ப்பாலில் நச்சு கலப்பதால் ஏற்படும் அனர்த்தம் ஏராளம்

**ஜூன் 05 ஆம் திகதி உலக சுற்றுச் சூழல் தினமாகும். இதனையொட்டி சூழலியலாளரும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசனின் இந்தச் சிறப்புக் கட்டுரை வெளியிடப்படுகிறது.**



**பொ.ஐங்கரநேசன்**
M.Sc,PGDJMC

(நேற்றைய தொடர்ச்சி....)

கடல் அலைகளின் தாக்கங்களில் இருந்து தீவுகளைக் காப்பாற்றுவதில் பவளப்பாறைகள் பெரும் பங்களிப்புச் செய்கின்றன. ஆனால், வங்கக்கடலில் பய ணிக்கும் கப்பல்களில் இருந்தும் சிங்கப்பூர், மலே சியா, இந்தோனேசியா, மியன்மார், தாய்லாந்து ஆகிய சூழவுள்ள நாடுகளில் இருந்தும் சேரும் பிளாஸ்ரிக் கழிவுகள் பவளப்பாறைகளில் அடைந்து அவற்றை இறக்கச் செய்து வருகின்றன. இயற்கைப் பாதுகாப்பு அரண்களாக விளங்கும் பவளப்பாறைகளின் அழிவு, அந்தமான் – நிக்கோபரர் தீவுகளின் அழிவுக்கும் வழிகோலும் என அஞ்சப்படுகிறது. சுற்றுச் சூழல்வாதிகள் பிளாஸ்ரிக் பிரச்சினைகள் என்று இப்படி ஏராளமானவற்றைப் பட்டியலிட, மருத்துவ விஞ்ஞானிகளும் தம் பங்குக்கும் வேறு எச்சரிக்கத் தொடங்கியுள்ளனர்.

### பொதியிடும் உணவுகளிலும் நச்சுப் பொருள் சேரும்

சில வகையான பிளாஸ்ரிக் தாளினால் சிலவகை உணவுகளைப் பொதிசெய்து நெடுநாள்கள் வைத்திருக்க நேரிடும்போது பிளாஸ்ரிக்கின் நச்சுக்கூறுகள் சிறிது சிறிதாக உணவைச் சென்றடைவது தெரியவந்துள்ளது. பொலிஸ்ரைறீன் பிளாஸ்ரிக்கிலிருந்து ஸ்ரையீனும் (Styene), பீ.வீ.சி எனப்படும் பொலிவீனைல் குளோரைட் (PVC-Poli Vinyl Cholori) பிளாஸ்ரிக்கிலிருந்து தாலேற்றுகளும் (Phthalates) பால் உணவுப் பொருள்களுடன் கலக்கின்றன. பீ.வீ.சி பிளாஸ்ரிக்கில் அதனை நெகிழ்த்துவதற்காகக் கட்மியம், ஈயம் போன்ற உலோகங்களும், தரம் சிதைவதைத் தடுப்பதற்காகத் தாலேற்றுகளும் சோக்கப்படுகின்றன. பீ.வீ.சி பிளாஸ்ரிக்கிலான விளையாட்டுப் பொருள்களைக் குழந்தைகள் கையாளும் போது இதன் கூறுகள் வாய் மூலம் குழந்தையின் உடலைச் சென்றடைகின்றன. தூய குடி தண்ணீர், சோடாப்பா னங்கள் அடைத்து வரும் பெற் (PET-Poly Ethylene Tetra Phthalate)போத்தல்களும் கூடப் பாதுகாப்பானவை அல்ல. இவற்றிலி ருந்து நீரினுள் அசற்றல்டி கைட் (Acetaldehyde) என்னும் இரசாயனப்பொருள் விடுவிக்கப்படுகிறது. இவ்வாறு பிளாஸ் ரிக்கின் விசத்தன்மை கொண்ட கூறுகள் உடலில் சேரும்போது தலைச் சுற்று, வாந்திபோதி, குடற்புண், நரம்புத் தளர்ச்சி தொடங்கி ஆண்மை இழப்பு, புற்றுநோய் வரை ஏராளமான இழப்புகள் ஏற்படுகின்றன.





பிளாஸ்ரிக் கழிவுகளை எரித்து அகற்றுவது என்பதும் இலேசான ஒன்றல்ல. தனது இருப்பின்போது அச்சுறுத்தும் பிளாஸ்ரிக் இறப்பின்போது முன்னரை விட அபாயகரமான அவதாரம் எடுக்கின்றது. பிளாஸ்ரிக் கழிவுகளை எரிக்கும் போது டையொக்சின் என்ற நச்சு உருவா கிக் காற்றுடன் கலக்கிறது. குளோரினை ஓர் உள்ளடக்கமாகக் கொண்ட பொருள்களை உருவாக்கும்போதும் அவற்றை எரிக்கும்போதும் விடுவிக்கப்படும் நூற்றுக்கும் மேலான நச்சுக்கூறுகளையே இப்படி டையொக்சின் என்று பொதுப் பெயர் கொண்டு அழைக்கிறார்கள்.

மனிதன் உருவாக்கிய நஞ்சுகளில் இதுவே மிகவும் கொடூரமானது. கதிர்த் தொழிற்பாட்டுக் கழிவுகளுக்கு அடுத்தபடியாக இது ஒப்பிடப்படுகிறது. இலகுவில் பிரிந்து அழியாத இந்த நச்சு இரசாயனம் சுவாசக்காற்றின் மூலமும் உணவுச் சங்கிலி மூலமும் உடலினுள் நுழைகிறது. கொழுப்பில் கரையக்கூடியதாகையால் அப்படியே உடல் இழையங்களில் நிரந்தரமாத் தேங்கியும் விடுகின்றது.

தமிழகத்தில் சென்னை மாநகராட்சி பெருங்குடி என்னும் இடத்தில் குப்பைகளைக் கொட்டி எரித்து வருகிறது. இப்பகுதியில் வாழும் பெண்களின் தாய்ப்பாலைச் சமீபத்தில் ஜப்பானில் உள்ள எஹிம் பல்கலைக்கழகத்தின் கடலியல் சுற்றுச் சூழல் மையம் ஆய்வு செய்துள்ளது. அப்போது, அதிர்ச்சியளிக்கும் அளவில் டையொக்சின் இருப்பது தெரிய வந்துள்ளது. தாய்ப்பால் மூலம் சிறுகச்சிறுகக் குழந்தைகளில் சேரும் டையொக்சின் நோயெதிர்ப்பு சக்தியைக் குறைத்துத் தொற்றுநோய்களை வாங்குவதுடன், மூளை வளர்ச்சியையும் பாதித்து வருவதை இந்த ஆய்வு உறுதி செய்துள்ளது. டையொக்சின் வாயு நுரையீரற் புற்று நோய் உட்படப் பல்வேறு வகையான

### ஆய்வில் அதிர்ச்சிகள்

புற்றுநோய்களையும் பிறப்புக் குறைபாடுகளையும் ஏற்படுத்தக் கூடியது.

அமெரிக்கா வியட்நாம் மீது போர் தொடுத்தபோது வானூர்திகளில் இருந்து காடுகளின் மீது ஏடென்ற் ஒறேன்ஞ்ச் ; (Adent Orange) என்னும் நச்சுக்களை கொல்லியை விசிறியது. காடுகளில் மறைந்திருந்த கெரில்லாப் போராளிகளை அடையாளம் காணும் பொருட்டு மரங்களின் இலைகளை உதிர்த்துவதற்காக விசிறப்பட்ட இக்களைகொல்லியில் டையொக்சினும் கலந்திருந்தது. போர் முடிந்து நாற்பது வருடங்கள் கழிந்த பின்னரும் அங்கு பிறக்கும் குழந்தைகள் பிறப்புக் குறைபாடுகளைக் கொண்டிருப்பதற்கு டையொக்சின் தான் காரணம் என நம்பப்படுகிறது. தவிரவும், டையொக்சின் மலட்டுத் தன்மையையும் ஏற்படுத்த வல்லது. இது ஈஸ்ற்ரோஜன் (Estrogeon) என்ற பெண் ஓமோனைப் போலப் பாசாங்கு செய்து பெண்களின் மாதவிடாய்ச் சக்கரத்தைக் குழப்புகிறது.



டையொக்சின் ஆண்களிலும் விந்து உற்பத்தியைப் பாதிக்கிறது. 50 ஆண்டுகளுக்கு முன்னால் ஆண்கள் பிறப்பித்த விந்துகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது இப்போது ஆண்களில் விந்துகளின் எண்ணிக்கை 50 விழுக்காடாகக் குறைவடைந்திருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. விந்துகள் இப்படிக் காணாமல் போனதற்கான காரணங்களில் மருத்துவ விஞ்ஞானிகள் டையொக்சினையே பிரதான வில்லனாக முதன்மைப்படுத்துகிறார்கள்.

பிளாஸ்ரிக்கின் இவ்வளவு மோசமான பின்விளைவுகளை அறிந்ததும் முதலில் அதிர்ந்தது பிளாஸ்ரிக்கை அதிகளவில் உற்பத்தி செய்து பயன்படுத்தி வரும் நாடுகள். அதை அடுத்து பென்ஸ், ஃபோக்ஸ் வாகன் போன்ற பிரபல மோட்டார் வாகன நிறுவனங்கள் பீ.வீ.சி வகைப் பிளாஸ்ரிக்கினால் செய்யப்படும் உதிரிப்பாகங்களின் உற்பத்தியைக் குறைத்துக்கொண்டுள்ளன.

வளர்ச்சி பெற்ற நாடுகள் பிளாஸ்ரிக்கின் பாதிப்புகளில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளும் விதமாக நாசூக்கான சில நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளன. தாங்கள் பயன்படுத்தித் தள்ளும் பிளாஸ்ரிக் கழிவுகளை மிகவும் தந்திரமாக வளரும் நாடுகளின் தலையில் கட்டத் தொடங்கியுள்ளன.

கணிசமான சலுகை விலையில் பிளாஸ்ரிக் கழிவுகளை விற்பதுடன், கூடவே பிளாஸ்ரிக் கழிவுகளில் இருந்து பிளாஸ்ரிக்கை மறு உற்பத்தி செய்யும் நுட்பத்தையும் சோத்துத் தரு வதால் வறிய நாடுகளும் பிளாஸ்ரிக் கழிவுகளை வாங்கிக் குவித்து வருகின்றன. ஆண்டுதோறும் அமெரிக்கா பயன்படத்திவிட்டு தூக்கி வீசும் பிளாஸ்ரிக்கழிவுகளின் அளவு சுமரர் 330 இலட்சம் தொன்கள். இவற்றில் பெரும் பங்கு இந்தியா, வங்களாதேசம், பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளுக்கு மறுசுழற்சி என்ற பெயரில் அனுப்பி வைக்கப்படுகின்றன.

பிளாஸ்ரிக் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகை புற்றுநோயைத் தூண்டி வருவதால் வளர்ந்த நாடுகள் தமது தொழிற்சாலைகளையும் வளர்முக நாடுகளுக்கு இடம்மாற்றி வருகின்றன. சென்னையை அடுத்த கும்மிடிப் பூண்டியில் டுபோன்ற் (Du Pont) நிறுவனம் நைலோன் ஆலையை அமைத்ததன் பின்னணி இதுதான்.

பிளாஸ்ரிக் கழிவுகளால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுவதைத் தொடர்ந்து ஆசிய நாடுகளிலும் பிளாஸ்ரிக்குக்கு எதிரான யுத்தம் அண்மைக்காலமாக வலுக்க ஆரம்பித்திருக்கிறது. உலக அளவில் பிளாஸ்ரிக்கை அதிக அளவு பயன்படுத்தும் நாடுகளின் பட்டியலில் அமெரிக்காவுக்கு அடுத்த இரண்டாவது இடத் தில் சீனா உள்ளது. இங்கு நாளொன்றுக்கு 300 கோடி பிளாஸ்ரிக் பைகள் பாவனையில் உள்ளன. இதனைக் கட்டுக்குள் கொண்டுவரும் முகமாக சீன அரசு அங்காடிகளில் இலவசமாக பிளாஸ்ரிக் பைகளை வழங்குவதற்குத் தடை விதித்திருக்கிறது.

தைவான், தனது வீட்டுக்கழிவுகளில் ஏறத்தாழ 20 விழுக்காடு அளவுக்கு பிளாஸ்ரிக்காகக் கழித்துக் கொண்டிருக்கிறது. நாள் தோறும் 16 மில்லியன் பிளாஸ்ரிக் பைகள் என்ற அளவில் பயன்படுத்தி வந்த தைவான் இப்பொழுது பாடசாலைகள், மருத்துவமனைகள், அரச அலுவலகங்கள் போன்ற பொது இடங்களில் ஒரு தடவை பாவித்து வீசும் பிளாஸ்ரிக் குவளைகள், பைகள், மேசை விரிப்புகளுக்குத் தடை விதித்துள்ளது.

இந்திய அரசு தேசியப் பூங்காக்களிலும் ஒதுக்கப்பட்ட காடுகளிலும் பிளாஸ்ரிக் பாவனையை முற்றாகவே விலக்கியுள்ளது. (11 ஆம் பக்கம் பார்க்க...)

**சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு யாழ் மாநகரசபை, வட மாகாண விவசாய அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் யாழ் பிரதேச செயலகம் ஆகியன ஒன்றிணைந்து முன்னெடுத்திருந்த மரம் நடுகை விழா நேற்று யாழ்ப்பாணம் முற்ற வெளித்திடலில்நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் உரையாற்றினார். அந்த உரை இங்கு முழுமையாக பிரசுரமாகின்றது.**


# இயற்கையை அழித்து சூழலை மாற்றி விட்டான் மனிதன்!



ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 5 ஆம் திகதி உலக சுற்றாடல் தினமாக கொண்டாடப் பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை தீர்மானித்துள்ளது. இந்த நாளை சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு தினமாக ஐக்கிய நாடுகள் சபை பயன்படுத்தி வருகின்றது. உயிர்களின் சுக வாழ்க்கை தொடர்பாக பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு மனித குலம் முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

ஆகவே சுற்றுச் சூழலைச் சீராக்கவும் சூழலைப் பேணுவதில் விழிப்புணர்வை ஏற்படுத்தவுமே சுற்றாடல் தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இயற்கை வளங்களான நீர்நிலைகள், காடுகள், வனாந்தரங்கள், வனசீவராசிகள், வளிமண்டலம், பறவைகள், கடற்கரைகள் என அனைத்தும் இறைவனால் வடிவமைக்கப்பட்ட இயற்கைப் பொக்கிஷங்களாவன. மனித குலம், விலங்கினம், பறவையினம், தாவரங்கள், கடல் வாழ் உயிரினங்கள் போன்றவற்றின் நல் வாழ்வு எங்கள் சுற்றுச்சூழலின் சமநிலையிலேயே தங்கியுள்ளது. இச்சமநிலையில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் சுற்றுச் சூழலை மட்டுமன்றி உயிரினங்களின் நல்வாழ்வுக்கு அச்சுறுத்தலாகவும் ஆபத்தாகவும் அமைந்து விடுகின்றன. நவீன விஞ்ஞான, தொழில்நுட்ப, கைத் தொழிற்றுறை வளர்ச்சியின் காரணமாக சூழல் மிக மோசமாக மாசடைந்து வருகின்றது.



அளவுக்கதிகமான பொலித்தீன் பாவனை சூழலை மிகமோசமாகப் பாதிப்படையச் செய்துள்ளது. கடல்வாழ் உயிரினங்களுக்கும் நீர்நிலைகளில் வாழும் உயிரினங்களுக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. அதனாலேயே 2018 ஆம் ஆண்டுக்குரிய சூழல் விழிப்புணர்வு திட்டத்தில் “Beat Plastic Polution” எனும்தொனிப்பொருளில்நெகிழ் எனப்படும் பிளாஸ்டிக் பாவனையால் சூழல் மாசடைதலை வெல்வோம் எனும் அர்த்தத்திலான முன்னெடுப்புக்கள் உலகம் முழுவதும் இன்றைய தினம் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அந்தவகையில் வடமாகாணத்தின் யாழ் மாவட்ட எல்லைக்குட்பட்ட யாழ் பிர தேச செயலகம், நகர அபிவிருத்தி அதிகார சபை, யாழ் மாநகரசபை ஆகியன எமது விவசாய அமைச்சுடன் இணைந்து முன்னெடுக்கின்ற இன்றைய இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுவதில் மகிழ்வடைகின்றேன்.

**சுயநலம், அகந்தையால் இயற்கைக்கு அழிவு**

ஆதிகாலத்தில் மனிதன் இயற்கையை ஐம்பெரும் பூதங்களாக அடையாளங்கண்டு அவற்றை வணங்கி வாழ்ந்தான். நாகரிகம் சற்று வளர்ச்சிபெற மனிதன் இயற்கையைச் சார்ந்து வாழப் பழகிக் கொண்டான். இன்னும் சிறிது காலம் செல்ல இயற்கையை நம்பி தனது விவசாய முயற்சிகளையும் ஏனைய முன்னெடுப்புக்களையும் ஆற்றத் தொடங்கினான்.

ஆனால் காலஞ் செல்லச் செல்ல மனிதனின் சுய நலமும் அகந்தையின் ஆதிக்கமும் இயற்கையை அழிக்க வழி வகுத்தது. இன்று இயற்கையை அழித்து வாழ முற்பட்டதால் சூழலில் பெரிய மாற்றங்களும் தீங்கான விளைவுகளும் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு மனித குலத்திற்கு ஏற்படக்கூடிய பெரிய தீங்குகள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

எம்மைச் சுற்றியுள்ள காடுகளும் அவற்றில் காணப்படும் நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த பெரிய விருட்சங்களும் வகைதொகையின்றி தறித்து அகற்றப்பட்டதன் விளைவே இன்று மழை வீழ்ச்சி குன்றி வருடாந்தம் ஏற்படக் கூடிய சாதாரண மழைவீழ்ச்சியான 1250mm கூட கிடைக்க முடியாத அளவுக்கு சூழல் மாசுபடுத்தப்பட்டுள்ளது. இந்த நிலை தவிர்க்கப்பட வேண்டும்.

> **“சூழலை மனிதன் நேசித்து வாழ்ந்ததால் அல்லது மதித்து வாழ்ந்ததால் சூழலும் மனிதனுக்கு ஏற்றம் மிகுந்த வாழ்வை வழங்கியது. உணவுக்கு பஞ்சமில்லை, குடிதண்ணீருக்குப் பஞ்சமில்லை, சுவாசிக்கத் தூய காற்று கிடைத்தது. கிருமிநாசினி பாவனையற்ற மரக்கறி, உரப் பாவனையற்ற அரிசி என அனைத்தும் அவனுக்கு உதவுவனவாக இருந்தன. ஆனால், இன்றோ...!**

கடந்த வருடங்களில் வடமாகாணசபையினால் முன்னெடுக்கப்பட்ட மரம் நடுகை நிகழ்வுகளுக்கு ஒப்பாக இந்த வருடம் ஆளுநர் மற்றும் நகர பிதா ஆகியோரால் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் மரக்கன்றுகளை நடுகின்ற நல்ல நிகழ்வுகள் இடம்பெற இருக்கின்றன.

இவ்வாறு வருடா வருடம் நடப்படுகின்ற மரக் கன்றுகள் அதே நிலையங்களில் திரும்பவும் நடப்பட வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தக் கூடாது. ஆகவே மரம் நடுகை விழாவின் பின்னரும் நடப்பட்ட மரங்கள் தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும். வீதியோரங்களில் இருமருங்குகளிலும் நடப்படுகின்ற இம் மரங்கள் வீதி ஒழுங்குகளுக்கு இடையூறுகள் அற்ற வகையிலும் அதேநேரம் உயர்ந்து வளர்ந்து வீதிக்கு நிழலைக் கொடுக்கக் கூடியதாகவும் மழை வீழ்ச்சிக்கு உதவுவனவாகவும் அமைந்திருத்தல் அவசியம்.

**பொலித்தீனால் மாசு**

பொலித்தீன் பாவனை தொடர்பாக பல்வேறு கவனயீர்ப்பு நடவடிக்கைகளை வடமாகாண சபை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது. பொலித்தீனானது நூறு வீதம் பாவனைக்குதவாத பொருளாக பிரகடனப்படுத்தப்படாத போதும் மாற்றீடாக இலகுவில் உக்கக் கூடிய பிரதியீடுகளின் பாவனை மேற்கொள்ளப்படு கின்றமை விரும்பத்தக்கது.

பொலித்தீன்போன்றபொருள்களால் கடற்கரையோரங்கள் மிகக்கூடுதலான அளவில் மாசடைகின்றன. இவற்றை மாசடையச் செய்யக்கூடிய நிறுவனங்கள் அல்லது தனி நபர்களின் விற்பனை ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் கழிவுகள் முறையாக அகற்றப்படுகின்றனவா என்பதை மாநகர சபை கண்காணித்தல் வேண்டும். புதிதாக முளைத்துள்ள மாபெரும் நட்சத்திர ஹோட்டல்களும் அவற்றிற்குச் சமமான விடுதிகளும் தமது கழிவுகளை எவ்வாறு அகற்றுகின்றன என்பது தொடர்பில் கண்காணிப்புக்கள் அவசியமானவை.

அபிவிருத்தி அபிவி ருத்தி என்று கூறி அமைக்கப்படும் கட்டடங்களும், ஆலைகளும் எவ்வகையான சூழல் மாசடைவுகளை ஏற்படுத்துவன என்று யோசிக்காமலே நாம் பேராசையால் உந்தப்பட்டு நடவடிக்கைகளில் இறங்குகின்றோம். பேராசை பெருநாசம் என்பதை மறவாதிருப்போமாக.

**இனி என்றாலும் சுற்றுச் சூழலைப் பேணி நாம் தேசத்தை வளப்படுத்துவோம்!!**

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் வளர்ச்சியடைய முன்னர் வாழ்ந்த மக்களுக்கு சூழல் பற்றிய நுணுக்க அறிவோ அல்லது விஞ்ஞான விளக்கங்களோ தெரிந்திருக்கவில்லை. ஆனால் அவர்கள் சூழலைப் பாதுகாக்கின்ற அறத்தை நன்கு தெரிந்து வைத்திருந்தார்கள். இயற்கையைத் தெய்வமாகவே கணித்தார்கள்.

மழைக் காலங்களில் வீட்டைச் சுற்றியுள்ள புற்தரைகளில் தேங்கும் நீரைச் சேமித்து நிலத்தடி நீரின் மட்டத்தை அதிகரிக்கச் செய்வதற்காகத் தமது காணி எல்லைகளைச் சுற்றி வரம்பு அமைக்கப் பழகிக் கொண்டிருந்தார்கள். அதாவது இறைவன் தந்த கொடையைப் பாதுகாத்தார்கள். வீண்விரயம் செய்யவில்லை. அதே போன்று தனது குடிசை ஓட்டைக் குடிசையாக இருந்தாலும் மழை பெய்தால் வீடு முழுவதும் நனைந்து விடும் என்று தெரிந்திருந்தும் மாதத்திற்கு ஒரு மழையாவது பெய்ய வேண்டும் எனப் பிரார்த்திக்க அவன் தவறவில்லை. தென்னிந்தியாவில் மாதம் மும்மாரி மழை பொழிய வேண்டும் என்று பிரார்த்தித்தார்கள்.

**அன்று இயற்கையை மதித்தான் மனிதன்**

சூழலை மனிதன் நேசித்து வாழ்ந்ததால் அல்லது மதித்து வாழ்ந்ததால் சூழலும் மனிதனுக்கு ஏற்றம் மிகுந்த வாழ்வை வழங்கியது. உணவுக்கு பஞ்சமில்லை, குடிதண்ணீருக்குப் பஞ்சமில்லை, சுவாசிக்கத் தூய காற்று கிடைத்தது. கிருமிநாசினி பாவனையற்ற மரக்கறி, உரப் பாவனையற்ற அரிசி என அனைத்தும் அவனுக்கு உதவுவனவாக இருந்தன. இன்று விஞ்ஞானம் வளர்ந்து விட்டது. மனிதன் செவ்வாயில் காலடி வைக்க எத்தனித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இயற்கையின் அழிவைத் தடுப்பதற்கு போதுமான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது கவலைக்குரியது.

அண்டை நாடான இந்தியாவில் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பரிதவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய விவசாய நிலங்கள் துண்டு துண்டாகப் பிரிக்கப்பட்டு, அடுக்குமாடிகள் கட்டப்பட்டும், தொழிற்சாலைகள் அமைத்தும் விற்பனை செய்யப்படுகின்றன. தூத்துக்குடியில் அமைக்கப்பட்ட செம்பு உற்பத்தி செய்யும் ஆலை கோடிக்கணக்கான ரூபா வருமதிகளை இந்தியாவிற்குப் பெற்றுக் கொடுக்கலாம்.

ஆனால் உணவை உற்பத்தி செய்வதற்கு விவசாய நிலம் அவசியமாகும். அதைப்பற்றி எமது அண்டை நாடு கவலைப்படுவதாகத் தெரியவில்லை. என்னை அண்மையில் சந்தித்த ஐக்கிய நாட்டின் உயர் அதிகாரி ஒருவர் உங்கள் விவசாய நிலங்களில் ஏன் தொடர்ந்து பணச் செலவையும் நட்டத்தையும் ஏற்படுத்தக்கூடிய நெல் உற்பத்தி செய்கின்றீர்கள் மாறாக அரிசி விலை குறைவான நாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யலாமே என வினவினார்.

நான் அவருக்கு பதிலளிக்கும் போது எமது மக்கள் குத்தரிசி சோற்றையே சாப்பிட்டுப் பழகியவர்கள். அவர்களுக்கு வெள்ளை அரிசி உணவு ஒத்துவராது. மேலும் நீங்கள் கூறுவது போல அனைவருமே அரிசியை விலைக்கு வாங்க முற்பட்டால் வெளிநாட்டு அரிசி கிடைக்கத் தாமதம் ஆகுந் தருணங்களில் எமக்காக அரிசியை உற்பத்தி செய்யப்போவது யார்? என வினவினேன்.

(11 ஆம் பக்கம் பார்க்க...)




# கல்விக் கதிர் வெளியீடு



## அரசியின் கொட்டாவி!

திருமலாம்பாள் என்ற அம்மையார் கிருஷ்ண தேவராயர் துணைவியருள் ஒருவர். அவர் அடிக்கடி கொட்டாவி விட்டுக்கொண்டே இருப்பார். அது பழக்கமாகி விட்டது. ஆனால் அரசருக்கோ அது பிடிக்கவில்லை. அன்றிரவு அரசர் ஆசையோடு நெருங்கிச் சென்ற போதும் அவள் கொட்டாவி விட்டுக் கொண்டே இருந்தாள். அப்போது அவள் முகத்தைப் பார்க்கவே மன்னருக்குப் பிடிக்கவில்லை. அன்றிலிருந்து அவளிருக்கும் பக்கம் செல்வதையே மன்னர் தவிர்த்து வந்தார்.அம்மயாருக்கு இது மிகுந்த வேதனையைத் தந்தது. மிகவும் வருத்தத்துடன் இருந்த அம்மையாரைப் பார்த்த தெனாலி ராமன் என்ன நடந்தது என்று விசாரித்தார்.

அம்மையாரோ, நான் கொட்டாவி விடுவது பிடிக்காமல் மன்னர் எனது இருப்பிடத்திற்கு வருவதையே நிறுத்திவிட்டார். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை என்று வருந்தினாள்.

தெனாலி ராமன் இப்பிரச்சினையைத் தீர்ப்பதாக அம்மையாருக்கு வாக்கு கொடுத்துச் சென்றான்.

ஒரு நாள் அரசு அதிகாரிகள் சிலர் அரசரைக் காண வந்தனர். அப்போது தெனாலிராமனும் அரசருடனிருந்தான். அந்த அதிகாரிகள் நாட்டில் பயிர் வளத்தை எப்படி மேம்படுத்துவது என்பது பற்றி அரசருடன் விவாதித்துக் கொண்டிருந்தனர்.

தெனாலி ராமனோ அவர்களது பேச்சினுள் புகுந்து பயிர் நன்றாக வளர வேண்டுமானால் யாரும் கொட்டாவி விடக்கூடாது என்றான்.

மன்னரும் மற்றவர்களும் தெனாலி ராமனை வினோதமாகப் பார்த்தனர். தெனாலிராமனோ விடாமல் விவசாயம் செய்பவர்கள் யாரும் வாழ்நாள் முழுவதும் கொட்டாவி விடவே கூடாது. அப்போது தான் பயிர் நன்றாக வளரும் என்றான்.

மன்னருக்கு கோபம் வந்துவிட்டது. ராமா, இது என்ன விநோதம், விவசாயத்திற்காக வாழ்நாள் முழுவதும் கொட்டாவி விடாமல் இருக்கமுடியுமா? என்றார்.

வேறென்ன மன்னா, உங்கள் முன்னால் கொட்டாவி விடும்போது உங்களுக்கு கோபம் வருவதைப் போல, பயிர்கள் முன்னால் கொட்டாவி விட்டால் பயிர்கள் கோபித்துக்கொள்ளாதா? கேவலம் கொட்டாவியால் ஒருவர் வாழ்க்கை நாசம் ஆக வேண்டுமா? என்று கூறிவிட்டு மன்னரை ஓரக்கண்ணால் பார்த்தார் தெனாலி ராமன்.

மன்னருக்கு தெனாலிராமன் சூசகமாக் என்ன சொன்னார் என்று புரிந்து போனது. அப்போதே கேவலம் கொட்டாவிக்காக தன் மனைவியை கோபித்துக் கொண்டேனே என்று வருந்தினார். தெனாலி ராமன் புத்திசாலித்தனமாக தகுந்த நேரத்தில் அதை புரியவைத்தான் என்பதையும் எண்ணி மகிழ்ந்தார்.

பின்னர் மகிழ்ச்சியில் திளைத்த அம்மையாரும் மன்னரும் சேர்ந்து, தெனாலி ராமனுக்கு பரிசுகளை அளித்து மகிழ்ந்தார்கள்.

## தவறு செய்வது மனித இயல்பு...



**நாம் ஒரு தவறை செய்யும் போது**

*அதை நியாயப்படுத்தக் கூடாது...*
*அதை மறக்க கூடாது..*
*பிறரைக் குற்றம் சாட்டக் கூடாது...*
*அதை மீண்டும் செய்யக் கூடாது...*




**பிறகு என்ன செய்வது...**


*ஒப்புக் கொள்ளுங்கள்..*
*மன்னிப்பு கோருங்கள்..*
*கற்றுக் கொள்ளுங்கள்...*




## 05 வித்தியாசம் கண்டுபிடியுங்கள்



## புள்ளிகளை இணையுங்கள்



## நிறம் தீட்டலாம் வாங்க





## தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் ‘கல்விக்கதிர்’ வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : ‘காலைக்கதிர்’
சிறுவர் சஞ்சிகைப் பிரிவு
30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.





# பிறர் மகிழ்வில் நாம் மகிழ்வோம்

### முதியோர் சங்கமம் விழாவில் அருட்பணி ச.இயுஜின் பிரான்சிஸ் அடிகளார்









யாழ் கியுடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட முதியோர் சங்கமம் நிகழ்வு இயக்குநர் அருட்பணி ச.இயுஜின் பிரான்சிஸ் அடிகளார் தலைமையில் தீவகசாட்டி திருத்தல முன்றிலில் நடைபெற்றது. சாவற்கட்டு, நாவாந்துறை,சோனகத் தெரு,குரு நகர் ஆகிய இடங்களைச் சேர்ந்த 100 முதியோர்கள் ஒன்றிணைந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக லண்டனில் இருந்து வருகை தந்த மருத்துவர் ஆனந்தி கமலநாதனும் சாட்டி பங்குந்தந்தை லொசிங்டன், அருட்பணி அன்புராசா அடிகளார், இணைப்பாளர் யோசப் பாலா ஆகியோரின் கருத்துக்களுடன் முதியோரின் முழுநாள் மகிழ்வூட்டல் நிகழ்வு சிறப்புடன் நடைபெற்றது.

இயக்குநர் அருட்பணி இயுஜின் பிரான்சிஸ் அடிகளாரின் தலைமைஉரையில் மூத்தோரின் அனுபவம் எமது எதிர்காலத்திற்கு வழிகாட்ட பிறரது மகிழ்ச்சிக்காகதம்மை அர்ப்பணிப்போராகவாழும் மூத்தோர் ஒன்று கூடலின் நோக்கம் அன்பை பகிர்தலாகும். கரித்தாஸ் என்றால் அன்பு அதனைப் பகிரும் நிறுவனமாக மனித முன்னேற்ற நடுநிலையம் இயங்குகிறது. மனித முன்னேற்ற பணிகளில் சாதி,மதம், இனம் என்ற பேதமின்றி ஒன்றிணைந்து மக்களை மகிழ்விப்பதே முக்கிய பணியாகும். இன்றுநாம் கூடி இருப்பதில் ஒருவர் மற்றவருக்காக மகிழ்ச்சியை பகிரும் நல்நோக்கம் நிறைவேற நல்லுள்ளம் கொண்டவர்களின் பங்களிப்புக்களே காரணமாகும்.– என்றார்.

சிறப்பு விருந்தினரான மருத்துவர் ஆனந்தி கமலநாதன் தனதுரையில்;

முதுமை என்று ஒதுங்கி வாழாது உடல் நலத்தில் அக்கறை கொண்டு உடல் பயிற்சியிலும் உணவு பழக்கவழக்கங்கள் மூலமும் மருந்தில்லா மருத்துவ முறைகளை வாழ்வில் பழக்கப்படுத்துவதுடன், எம்மால் முடியும் என்ற மனத் தைரியத்தை வளர்த்து முதுமையின் அனுபவத்தை பிறருடன் மகிழ்வூட்டி வாழ எம்மாலான பங்களிப்புக்களை உங்களுடன் பகிர்ந்துகொள்வேன்.– என்றார்.

முதியோர் சங்கங்களின் மனப்ப திவுகள் பகிரப்பட்டபோதுமுதியோர் சங்கங்களாக ஒன்று கூடுவது மட்டுமல்ல,மருத்துவ, ஆன்மீக, உளநல ஒன்றுகூடல்கள் சுற்றுலாக்களால் மகிழ்வூட்டும் நிறுவனத்தின் வழிகாட்டல் எமதுபகுதிகளில் நாம் சமூக,சமய பணிகளில் ஈடுபடவைத்ததுடன் எமது மன மகிழ்விற்கு மாதாந்தம் ஒன்று கூடிசெயற்படவைத்ததால் நாங்கள் தனித்துவிடப்பட்டவர்கள் அல்ல ஒன்றுபட்டவர்களாக மகிழ்வடை கின்றோம் என ஜே/86 முதியோர் சங்கத் தலைவர் சி.சிவஞானம் தெரிவித்தார்.

நான் ஒரு கான்சர் நோயாளி. எனக்கு டொக்ரர் ஆனந்திஅவர்கள் தந்த ஆலோசனை கேட்டு மருந்தினை விட்டு உணவுப்பழக்கத்திலும் உடற்பயிற்சியிலும் மிக கவனமாகக் கடைப்பிடித்ததால் இன்று சுகம் பெற்றுஅவர் முன் நன்றி கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன் என முதியோர் பிரதிநிதி ஆனந்தன் தெரிவித் தார்.

சுற்றுலாவுடன் ஆடல், பாடல், விநோத உடை அலங்காரம்,குரல் கொடுப்பு பவனிகள் மூலம் மகிழ்வூட்ட விருந்தோம்பலால் ஒன்றித்தபொழுதுகள் முதியோர் சங்கம நிகழ்வாய் அமைந்தது.

(இ



# பிளாஸ்ரிக்கின் பிடியில் பூமி!

(08ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பார்வையாளர்களால் எடுத்து வரப்படும் பொலித்தீன் பைகள் பூங்காவின் வாசலில் வாங்கப்பட்டு அதற்கு மாற்றீ டாகச் சுற்றுச்சுழல் நட்புமிக்க கடதாசிப் பைகளும், மிகக்குறைந்த கட்டணத்தில் துணிப்பைகளும் வழங்கப்பட்டு வருகின் றன. இதற்கு மேலாக, மத்திய சுற்றுச் சுழல் அமைச்சகம் 50 மைக்குறோன்களுக்கும் குறைவான கனதியுடைய பிளாஸ்ரிக் பைகளுக்குக் கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் தடை விதித்திருக்கிறது.

பிளாஸ்ரிக்கை ஒழித்துக்கட்டும் யுத்தத்தில் வங்கதேசம் பெற்றிருக்கும் வெற்றி பெரிது. 1998ஆம் ஆண்டு வங்களா தேசத்தைச் சூழ்ந்த புயலால் நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியது, பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்ட னர். இதற்கான காரணம் மழைநீர் வழிந் தோட முடியாதவாறு கால்வாய்கள் பிளாஸ்ரிக் பைகளால் அடைக்கப்பட்டிருந்தமையே ஆகும். இதையடுத்து வங்காள தேசம் எல்லாவகையான பிளாஸ்ரிக் பைகளினதும் பாவனையை விடாப்பிடியாகத் தடைசெய்து அதனை வெற்றிகரமாக நிறைவேற்றியும் வருகிறது. பிளாஸ்ரிக் பைகளை இறக்குமதி செய்வது, உற்பத்தி செய்வது, காட்சிப்படுத்துவது, விற்பனை செய்வது, பயன்படுத்துவது என்று எல்லா மட்டங்களிலும் தடையை விதித்திருக்கிறது. இதற்கான தடைஆணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதும் குறிப்பிடப்பட்டது. மீறுவோருக்குத் தண்டப்பணம் அறவிட, சிறைத்தண்டனை வழங்கச் சட்டம் உறுதி செய்வதால் பிளாஸ்ரிக் இல்லாத வங்காளம் சாத்தியமாகியுள்ளது.

இலங்கையில் 20 மைக்குறோன்கள் மற்றும் அதற்குக் குறைவான தடிப்புடைய பிளாஸ்ரிக் பைகளுக்கு 2007 ஆம் ஆண்டு முதல் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அப்போதைய சுற்றுச்சுழல் அமைச்சரும் தற்போதைய ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன இத்தடையைக்கொண்டு வந்திருந்தார். அவர் 2015ஆம் ஆண்டு ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் இத்தடைச் சட்டம் 2016, பெப்ரவரி 1ஆம் திகதி முதல் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படும் எனவும், மீறுவோர்க்கு 10,000 ரூபா தண்டம் அல்லது 2 வருடங்களுக்கு மேற்படாத சிறை வாசம் என்றும் கண்டிப்புக் காட்டப்பட்டுள்ளது. எனினும் வடக்கில் இத்தடை செயலுருப்பெறவில்லை.

ஒரு தடவை பாவித்துவிட்டு வீசும் பிளாஸ்ரிக் பைகள், தட்டுகள், குவளைகள் போன்ற பொருட்களுக்கான கட்டுப்பாடுகளும் தடைகளும் பல நாடுகளில் சாத்தியமாகி அவ்விடத்தை மீண்டும் இயற்கை உற்பத்திகளான அழகிய கடதாசிப் பைகளும், அட்டைப்பெட்டிகளும், துணிப்பைக ளும் மாற்றி வருகின்றன. இம்மாற்றத்தை நாமும் எமது மண்ணில் தாமதமின்றி நிகழ்த்தியாக வேண்டும். ஏனைய பிளாஸ்ரிக்குகளுக்கான வெற்றிகரமான மாற்றீடு இன்னமும் அறிவியலாளர்களின் சிந்த னையை எதிர்பார்த்துக் கண்டறியப்படா மலே உள்ளது. அதுவரையில் தேவையற்ற பிளாஸ்ரிக் பொருள்கள் வாங்குவதைத் தவிர்ப்பது, தேவைகளை இயன்றளவு குறைத்துக் கொள்வது, முடிந்த வரை நீண்டகாலம் திரும்பத் திரும்பப் பயன்படுத்துவது, எறிவதற்கு முன்னால் இன்னொரு முறை பயன்படுமா என்று சிந்திப்பது, கழிவுகளில் இருந்து சுற்றுச்சுழலுக்குப் பாதகம் இல்லாத முறையில் மீண்டும் பிளாஸ்ரிக்கைப் பிரித்தெடுப்பது போன்ற கழிவு மேலாண்மையைக் கையில் எடுக்க வேண்டும்.

இயற்கையோடு இயைந்த வாழ்வும், கந்தையானாலும் கசக்கிக் கட்டுகின்ற சிக்கன வாழ்வினூடான கழிவு மேலாண்மையும் தமிழர் வாழ்வியலுக்குப் புதியது அல்லவே! ★

# இயற்கையை அழித்து சூழலை மாற்றி விட்டான் மனிதன்!

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சந்தையில் கிடைக்கும் என்றார். பல காரணங்களுக் காக அரிசி வரத் தடைப்படலாம் என்று கூறி மழையின்மை, போர், சுனாமி போன்ற பலதையும் குறிப்பிட்டேன். அவர் சிரித்தார். ஆனால் இன்று ஐ.நா. சபையினர் இந்த வாறான நாட்டுக்கு நாடு ஏற்படுத்தக்கூடிய ஒத்துழைப்பையே வலியுறுத்தி வருகின்றார்கள்.

எனவே சுற்றாடலும் சூழலும் எமக்கு இசைவாக அமையக்கூடிய வகையில் நாம் சூழலை மாற்றி அதனை நேசிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

**கிருமிநாசினியால் ஏற்பட்டுள்ள விபரீதம்**

எமது அளவுக்கு மிஞ்சியதான கிருமிநாசினிப் பாவனை, இரசாயனக் கலவைப் பாவனை ஆகியன எமக்கு உதவக் கூடிய சிறு சிறு பறவை இனங்களையும் புச்சி, புழுக்கள் இனங்களையும் முற்றாக இல்லாது ஒழித்துவிட்டன. அதே போன்று கையடக்கத் தொலைபேசிகளில் குறுக்கும் நெடுக்குமாக செய்திகளை அனுப்பிக் கொண்டிருக்கின்ற நுண் அலை வரிசை கள் சிட்டுக் குருவி போன்ற சிறிய சிறிய பறவை இனங்களை இல்லாது ஒழித்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

எனவே எமது சிறு சிறு சந்தோஷங்களுக்காக பயன்படுத்துகின்ற இலத்திரனி யல் சாதனங்கள் சூழலில் எவ்வளவு பாதிப் புக்களை ஏற்படுத்துகின்றன என்பதை நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் இன்று பழமையான வாழ்க்கை முறைக்கு திரும்ப வேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலையில் இருக்கின்றோம் என்றால் அது மிகையாகாது.

பூடானின் அரசர் அண்மையில் தமது நாட்டைப் பற்றி கூறியிருந்தார். அங்கு கட்டாயமாக 72 சதவீத அந் நாட்டின் நிலம் காடாக அமைய வேண்டும் என்று சட்டம் இயற்றப்பட்டிருக்கின்றது. எங்கள் வன்னியிலோ இருக்குங் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. கூகுள் மூலமாகப் பார்த்தால் அடர்ந்த காட்டினுள் எவ்வாறு மரங்கள் அப்புறப்படுத்தப்பட்டு வெட்டை வெளியாக நிலங்கள் காணப் படுகின்றன என்பது தெரியவரும். இவை தாமாக அழிவதில்லை. அழிக்கப் படுகின்றன.

ஆகவே சூழலை பாதுகாக்கக் கூடிய மரங்களை நடுகின்ற கடமைகளை யாவது நாம் விரைந்து செயற்படுத்த வேண்டும். இன்றைய நிகழ்வை சிறப்பாக நடத்த சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய எமது ஆளுநருக்கு எமது நன்றிகள் உரித்தாகுக! அதே போல் எமது நகர பிதாவுக்கும் எமது பாராட்டுக்கள் உரித்தாகுக! தொடர்ந்து மரங்கள் நடுவதற்கு பொதுமக்கள் அனைவரதும் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப் பெறவேண்டும் எனக் கேட்டுக் கொண்டு இன்றைய இந்த நல்ல தினத்தில் வீட்டுக்கொரு மரம் நடுவதற்கும் அனைவரும் முன்வர வேண்டும் எனத் தெரிவித்து எனது உரையை நிறைவு செய்கின்றேன். ★

# குவாட்டமாலாவில் எரிமலை வெடிப்பு 10 கிலோமீற்றர் வரை எழும்பிய சாம்பல்





குவாட்டமாலாசிற்றி, ஜூன் 06

குவாட்டமாலாவிலுள்ள எரிமலை வெடித்துச் சிதறியதில் அப்பகுதியிலுள்ள வீடுகளைப் பறந்து வந்து தாக்கிய சூடான கருங்கற்கள், சாம்பல் மற்றும் லாவாவினால் ஏற்பட்ட பாதிப்புகளில் இறந்துபோன மற்றும் காணாமல் போன பொதுமக்களை தேடும் பணியில்தீயணைப்புவீரர்களுக்கு அந்நாட்டு ராணுவ வீரர்கள் உதவி செய்து வருகின்றனர்.

குவாட்டமாலாவிலுள்ள பேகோ என்ற எரிமலை வெடித்ததில் இதுவரை 62 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர் எனவும் அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த எரிமலை வெடிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கானோர் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப் பட்டுள்ளனர்.

வானத்தை நோக்கி சுமார் 10 கிலோமீற்றர் (33,000 அடி) தூரம் வரை சாம்பலை கக்கிய எரிமலையின் சீற்றம் முடிவுற்றுள்ளதாக எரிமலையியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குவாட்டமாலாவின் தலைநகரான குவாட்டமாலா சிற்றிக்கு தென் –மேற்கு திசையில் 40 கிலோமீற்றர் தொலைவிலுள்ள இந்த எரிமலையானது வானத்தை நோக்கிக் கரும் புகையையும், சாம்ப லையும் வெளியிட்டது.

முன்னதாக, ஒருபெரும்ஆறுபோன்று வெளியேறிய எரிமலை குழம்பான லாவா அருகிலுள்ள எல் ரோடியோ என்ற கிராமத்தைச் சூழ்ந்து நகர்ந்ததில் அங்கிருந்த வீடுகளில் இருந்தவர்கள் தீயில் சிக்கிப் பலியாயினர் என்று அந்நாட்டின் தேசிய பேரிடர் மேலாண்மை முகமையான கான்ரெட் தெரிவித்துள்ளது.

எரிமலை தொடர்ந்து கக்கி வரும் சாம்பலின் காரணமாக குவாட்டமாலா நகரத்திலுள்ள விமான நிலையம் மூடப்பட்டுள்ளது. (ஐ)

## முன்னாள் மலேசியப் பிரதமரின் மனைவியிடம் ஊழல் விசாரணை



மாநில நிதி முதலீட்டில் இடம்பெற்றஊழல்தொடர்பில்வாக்குமூலம்பெற்றுக் கொள்வதற்காக முன்னாள் மலேசிய பிரதமர் நஜிப் ரசாக்கின் மனைவி மலேசியாவின் ஊழல் தடுப்பு அமைப்பொன்றினால் அழைக்கப்பட்டுள்ளார்.

பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட 114 மில்லியன் ரிங்கிட் பணம், 400 இற்கும்அதிகமான ஆடம்பரக் கைப்பைகள் மற்றும் ஆபரணங்கள் என்பவற்றின் பெறுமதிகளை கணக்கிடு வதற்காக வல்லுநர்கள் வருகை தந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

விலைமதிப்பற்ற பல கைப்பைகள், ஆபரணங்கள் மற்றும் அடுக்குமாடி கட்டடங்களில் இருந்து பெருந்தொகையான பணம் என்பன பொலிஸார் கைப்பற்றியமையை அடுத்தே மாநில முதலீட்டு மோசடியில் நஜிப் ரசாக் மற்றும் அவரதுகுடும்பத்தினர்தொடர்பு பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இதன் காராணமாகவே அவரது மனைவி விசாரணைக்காக அழைக்கப் பட்டுள்ளார்.

இதேவேளை நஜிப்தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளபோதிலும், கடந்த மாதம் 10.6 மில்லியன் சந்தேகத்திற்கிடமான முறையில் நஜாப்பின் வங்கிக் கணக்கிற்குப் பணப்பரிமாற்றம்செய்யப் பட்டுள்ளதாகவும், இது மாநில நிதி முதலீட்டில் இருந்து பெறப்பட்டது எனச் சந்தேகிப்பதாகவும் ஊழல் தடுப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

# ட்ரம்ப் – கிம் சந்திப்பு 12ஆம் திகதி காலை




வாஷிங்டன், ஜூன் 06

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மற்றும் வட கொரிய தலைவர் கிம் ஜாங் – உன் இடையே எதிர்வரும் ஜூன் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் நடைபெறவுள்ள சந்திப்புக்கான ஏற்பாடுகள் நல்லமுறையில் நடந்து வருகின்றன என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இருநாட்டு தலைவர்களும் முதல் முறையாக உள்ளூர் நேரப்படி காலை ஒன்பது மணியளவில் சந்திப்பார்கள் என்றும், இது தொடர்பான தகவல்களை ட்ரம்ப் தினமும் கேட்டறிந்து வருகிறார் எனவும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

ஆனால், வட கொரியா அணுஆயுதங்களைக் கைவிட்டால்தான் அதன் மீதான தடைகள் விலக்கப்படும் என்று அமெரிக்கா மீண்டும் கூறியுள்ளது.

சிங்கப்பூரால் ஒருங்கிணைக்கப் படும் இந்தச் சந்திப்பிற்கு ஒரு வாரமே உள்ள நிலையில், சந்திப்பு தொடர்பாக ஒருசில தகவல்களே இதுவரை பொதுவெளியில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன.

மேலும், சிங்கப்பூரின் எந்த இடத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறும் என்பது இதுவரை தெளிவாகத் தெரியவில்லை.

அணுஆயுதமற்ற கொரிய தீபகற்பத்தை உருவாக்குவது தொடர்பான விடயங்களே இந்த பேச்சில் முக்கிய இடத்தை வகிக்கும் என்று கருதப் படும் நிலையில், கொரியப் போரை முறைப்படி முடித்து வைப்பது குறித்தும் இந்தச் சந்திப்பின்போது ஆலோசிக்கப்படும் என்று சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ட்ரம்ப் அறிவித்த இந்தச் சந்திப்பு திட்டமிட்டபடி நடைபெறுமா இல்லையா என்பது தொடர்பான கேள்வி தொடக்கத்திலிருந்தே இருந்து வந்த நிலையில், கடந்த மாத இறுதியில் வடகொரியாவுடன் ஏற்பட்ட வார்த்தை மோதலின் காரணமாக இந்தச் சந்திப்பு ரத்துச் செய்யப்படுவதாக ட்ரம்ப் அறிவித்திருந்தார். பிறகு வட கொரியத் தூதர் ஒருவரை நேரில் சந்தித்துப் பேசிய பின்னர் சந்திப்பு திட்டமிட்டபடி நடைபெறும் என்று மீண்டும் அறிவித்தார். (ஐ)

## 44 வீத சிறுவர்களுக்கு ஆப்கனில் கல்வி இல்லை

### மனித உரிமை அமைப்புக்கள் தகவல்

ஆப்கானிஸ்தானிலுள்ள மொத்த சிறுவர்களில் 44 வீதமானவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை என்று மனித உரிமைக் குழுக்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

பயங்கரவாதம், குழந்தைத் திருமணம், வறுமை, பெண் குழந்தைகளுக்கு எதிரான பாலினப் பாகுபாடு ஆகியவையே சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாமல் போவதற்கான முக்கிய காரணங்கள். அதிகரித்து வரும் வன்முறையால் பாடசாலைகள் செயற்பட முடியாமையும் இதற்குக் காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதனால், 7 வயது முதல் 17 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களில் 3.7 மில்லியன் பேர், அதாவது 44 வீதத்தினர் பாடசாலை செல்லமுடியவில்லையென வும் தகவல்கள் கூறியுள்ளன.

பெண்களுக்குக் கல்வியறிவு அளிக்கக் கூடாது எனும் தலிபான் பயங்கரவாத அமைப்பின் மனப் போக்கால், சிறுமிகளின் நிலை பரிதாபத்திற்குரிய தாய் இருப்பதாகவும் மனித உரிமை அமைப்புக்கள் குறிப்பிட்டுள்ளன. (ஐ)

# பெண்ணுக்கு உதட்டில் முத்தம் கொடுத்த பிலிப்பைன்ஸ் அதிபர்



சியோல், ஜூன் 06

வெளிநாட்டுப் பிலிப்பைன்ஸ் தொழிலாளர்களுடனான கலந்தாய்வின்போது அனைவரது முன்னிலையிலும் வைத்து பெண் ஒருவருக்கு உதட்டில் முத்தம் கொடுத்த பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி உலக மக்கள் மத்தியில் வெறுப்பை சம்பாதித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவர்கள் உத்தியோகபூர்வ பயணமாக தென்கொரியாவில் உள்ள சியோல் நருக்கு சென்றுள்ளனர்.

தென்கொரியாவில் இருக்கும் வெளிநாட்டு பிலிப்பைன்ஸ் தொழிலாளர்களுடன் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி உரையாடினார். இந்தச் சந்திப்பு வழக்கமாக நடக்கும் ஒன்றாகும். இதன்போது தென்கொரியா நாட்டவர்களும் அதில் கலந்து கொண்டனர். இதில், மேடையில் நின்று ஜனாதிபதி உரையாடிக் கொண்டிருக்கையில், இரண்டு பெண்களை மேடைக்கு அழைத்துச் சற்று நகைச்சுவையாக உரையாடலைக் கொண்டுபோக முயற்சித்து அவர்களிடம் சில கேள்விகளைக் கேட்டுள்ளார்.

இறுதியில், மேடைக்கு வந்த இரண்டு பெண்களில் ஒரு பெண்ணிடம், நீ இன்னும் திருமணம் செய்துகொள்ளவில்லையா? அல்லது உனது கணவனை விட்டுப் பிரிந்துவிட்டாயா? எனக் கேள்விகளை கேட்டுவிட்டு இதனை ஒரு ஜோக்காக எடுத்துக்கொள்ளவேண்டும் எனக் கூறி அந்த பெண்ணுக்கு உதட்டு முத்தம் கொடுத்துள்ளார். இவர் இவ்வாறு செய்வதை அங்கிருந்த அனைவரும் கரகோஷம் எழுப்பி ஆரவாரம் செய்தனர். ஆனால் தென்கொரிய நபரைத் திருமணம் செய்துள்ள அப்பெண்ணுக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் இந்த மோசமான செயல், அரசியல் தலைவர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இவரின் இந்தச் செயல் அருவெருக்கத்தக்க வகையில் உள்ளது என சமூகவலைத்தளவாசிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் சமூகவலைதளங்களில் இவருக்கு எதிராக கண்டனங்கள் அதிகரித்துள்ள நிலையில், ஜனாதிபதி அலுவலகம் இது குறித்து எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை. (ஐ)

# 2019 முதல் தமிழகத்தில் பிளாஸ்ரிக்குக்குத் தடை

## முதல்வர் பழனிச்சாமி அறிவிப்பு

சென்னை, ஜுன் 06

2019ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் தமிழகத்தில் பிளாஸ்ரிக் பை மற்றும் பிளாஸ்ரிக் போத்தல்களை பயன்படுத்தவும், விற்பனை செய்யவும் தமிழக அரசு தடை விதித்துள்ளது. சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி இதனை அறிவித்துள்ளார்.

பிளாஸ்ரிக் பொருள்களுக்குத் தடை விதிப்பது குறித்து, தமிழக அரசு ஒரு குழுவை அமைத்திருந்தது. அக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில், தமிழக முதல்வர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

பால், தயிர், எண்ணெய் மற்றும் மருத்துவப் பொருள்களுக்கு மட்டும் இதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அறிவித்துள்ளார்.

பிளாஸ்ரிக் பொருள்களால், மழை நீர் கால்வாய்களில் அடைப்பு ஏற்படுவதாகவும், கழிவு நீர் பாதைகளும், நிலத்தடி நீரும் பாதிக்கப்படுவதாகவும் முதல்வர் கூறினார்.

பிளாஸ்ரிக் தாள், தட்டு, கைப்பை, உறிஞ்சிகள் ஆகிய வற்றைத் தயாரிக்கவும், சேமித்து வைக்கவும், விற்பனை செய்யவும் 2019ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்ரிக் பொருள்களுக்கு பதில் துணிப்பைகள், காகித பைகள் பயன்படுத்துமாறு முதல்வர் கேட்டுள்ளார். (ஜ)

## பிரதமரை நேரில் சந்திப்பதற்கு அனுமதி கோருகிறார் எடப்பாடி

சென்னை, ஜுன் 06

காவிரி மேலாண்மை வாரியம் அமைத்தமைக்காக பிரதமர் மோடியை நேரில் சந்தித்து நன்றி தெரிவிக்கத் தமிழக முதலமைச்சர் பழனிசாமி அனுமதி கோரியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவின் மத்திய திட்டக் குழுவுக்கு மாற்றாக அமைக்கப் பட்டுள்ள நிதி குழுக் கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக டெல்லி செல்லவுள்ள முதலமைச்சர் பழனிசாமி பிரதமரை சந்திக்க நேரம் கேட்டுள்ளார் எனத் தெரிய வருகிறது.

காவிரி விவகாரத்தில் காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்கான உச்சநீதிமன்றின் உத்தரவுக்கு அமைய மத்திய அரசு காவிரி மேலாண்மை வாரியம் அமைத்தது.

இந்நிலையில் பிரதமரை நேரில் சந்தித்து நன்றி தெரிவிக்க முதலமைச்சர் பழனிசாமி திட்டமிட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது. (ஜ)

## ஆறுமுகசாமி விசாரணை ஆணையம் நடுநிலையாக செயற்படவேயில்லை

சென்னை, ஜுன் 06

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக விசாரணை செய்யும் விசாரணை ஆணையகம் நடுநிலையாக செயற்படவில்லை என அம்மா மக்கள் முன்னேற்றக் கழக துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் குற்றம்சாட்டியுள்ளார்.

ஜெயலலிதா மரணம் தொடர்பான விசாரணைகள் பரபரப்பாக இடம் பெற்று வரும் நிலையில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த தினகரன் இவ்வாறு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,



ஆறுமுகசாமி விசாரணை ஆணையம் நடுநிலையோடு செயல்படும் என்று எதிர்பார்த்தோம். அம்மா, மருத்துவமனையில் இருந்தபோது எடுக்கப்பட்ட வீடியோவை வெற்றிவேல் வெளியிட்டபோது அவர் மீது வழக்குப் பதிவு செய்தார்கள்.

கடந்த வாரம் விசாரணை ஆணையத்தில் அம்மாவின் ஒலிப்பதிவை மருத்துவர் சிவகுமார் சமர்ப்பித்திருந்தார். அந்த ஒலிப்பதிவை ஆறுமுகசாமி ஆணையமே வெளியிட்டது. இந்த ஒலிப்பதிவை வெளியிட்டமைக்கான காரணம் என்ன? இதற்கு யார் மீது வழக்கு பதிவு செய்வது? ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான தூத்துக்குடி சம்பவத்தை திசை திருப்ப வேண்டும் என்பதற்காகவே இதனை வெளியிட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், ஆறுமுகசாமி ஆணையம் அமைக்கப்பட்டதற்கான நோக்கமே இதுவரை தெளிவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ)

## சட்டமன்ற நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்புச் செய்க!

சென்னை, ஜுன் 06

தமிழக சட்டமன்ற நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்புச் செய்வது தொடர்பாக தமிழக அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் சரத்குமார் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாடாளுமன்ற நிகழ்வுகளையும், ஆந்திரா மற்றும் கர்நாடகா போன்ற மாநிலங்களின் சட்டமன்ற நிகழ்வுகளையும், நேரடி ஒளிபரப்பு செய்வது போன்று, தமிழக சட்டமன்ற நிகழ்வுகளையும் நேரடி ஒளிபரப்பு செய்யவேண்டும்.

இவ்வாறு நேரடி ஒளிபரப்பு செய்யும்போதே சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகள், விவாதங்கள் பொது மக்களுக்கு தெரியவரும். எதிர்க்கட்சிகளின் அமளிகள், அவசியமற்ற வெளிநடப்புகள் போன்றவையும் வெளிச்சத்துக்கு வரும்.



சரத்குமார் வலியுறுத்தல்

அத்துடன், தங்களுடைய தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளையும் மக்கள் அறிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும். எனவே பேரவை நிகழ்வுகளின் நேரடி ஒளிபரப்பு குறித்து உடனடியாகப் பரிசீலித்து தமிழக அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ஜ)

## பேசித் தீர்ப்பதில் தவறே கிடையாது

சென்னை, ஜுன் 06

காவிரி பிரச்சினையைப் பேசி தீர்ப்பதில் தவறில்லை என நடிகர் ரஜனிகாந்த் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தெரிவித்துள்ளார்.

மேலும் தீர்க்க முடியாத எத்தனையோ பிரச்சினைகள் பேச்சுகள் மூலம் தீர்க்கப் பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

காவிரி நதி நீர் பங்கீட்டு விவகாரம் தொடர்பாக கர்நாடகத்திற்கும், தமிழ் நாட்டுக்கும் இடையே பிரச்சினை நீடித்து வருகிறது. தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்ட தண்ணீரின் அளவை குறைத்து, அதை பெங்களூரின் குடிதண்ணீர்த் தேவைக்கு வழங்கியது.

இந்தப் பிரச்சினையில் நடுவர் மன்ற தீர்ப்பை அமுல்படுத்த, உச்சநீதிமன்ற உத்தரவுப்படி மத்திய அரசு காவிரி மேலாண்மை ஆணையத்தை அமைத் துள்ளது.



ரஜனிகாந்த் தெரிவிப்பு

இந்நிலையில் கர்நாடக அரசு தமிழக அரசுடன் பேச்சுக்கு விருப்பம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அங்கு பேசும்போது காலா திரைப்படம் ஆண்டவன் அருளாலும், இரசிகர்கள் மற்றும் மக்களின் ஆதரவாலும் வெற்றி பெறும் என்றும் நடிகர் ரஜனிகாந்த் கூறினார். (ஜ)

## சசிகலாவின் துரோகத்தை ஜெயலலிதா அறிந்திருந்தார்

### கூறுகிறார் மருது அழகுராஜ்

சென்னை, ஜுன் 06

சசிகலா துரோகம் செய்தார் என்பதை முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அறிந்திருந்திருந்தார் என்றும் அது குறித்து தன்னிடம் தெரிவித்திருந்ததாகவும் நமது எம்.ஜி.ஆர். பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் மருது அழகுராஜ் வாக்குமூலம் அளித்துள்ளார்.

ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக விசாரணை செய்யும் ஓய்வுபெற்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையிலான விசாரணை ஆணையத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அவர் இவ்வாறு பரபரப்பு வாக்குமூலம் அளித்துள்ளார்.



இதன்போது, துரோகம் இழைத்தாகக் கடந்த 2011ஆம் ஆண்டு சசிகலா மற்றும் அவருடைய குடும்பத்தினரை போயஸ் கார்டன் இல்லத்திலிருந்து வெளியேற்றிய ஜெயலலிதா மாற்றுக் கருத்து இருந்தால் தன்னையும் வெளியேறுமாறு கூறினார் என்றும், எனினும், ஜெயலலிதாவுடன் இருக்க விரும்புவதாக கூறிய பின்னரே நமது எம்.ஜி.ஆர். பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் பொறுப்பை வழங்கினார் என்றும் வாக்குமூலம் அளித்துள்ளார்.

அத்துடன், ஜெயலலிதாவுக்கு உடல் நிலை சரியில்லை என்ற நிலையில், அவரது வீட்டு வாசலில் அம்புலன்ஸ் தயார் நிலையில் நிற்கவில்லை என்றும் உடனிருந்தவர்கள் ஜெயலலிதாவைச் சரியாக கவனித்துக் கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டையும் முன்வைத் துள்ளார்.

மேலும், மருத்துவ சிகிச்சைக்காக ஜெயலலிதாவை வெளிநாடு அழைத்துச் செல்வதைத் தடுத்த சக்தி யார் என்ற இரகசியத்தையும் மருது அழகுராஜ் வெளிப்படுத்தியுள்ளதாகவும் விசாரணை ஆணைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மாநாடு தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பொன்று இடம் பெற்றது. இதன்போது அங்கு முதலமைச்சரிடம் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் வழங்கிய பதி வருமாறு:-

கேள்வி: தமிழ் மக்கள் பேரவையின் செயற்பாடுகள் கடந்த காலங்களில் மந்த கதியில் இடம்பெறுவதாகப் பொதுவாக கூறப்பட்டதே. இந் நிலையில் தற்போது இளைஞர் மாநாடும் வெறுமனே கருத்துருவாக்கமாக மாத்திரமாகவா இருக்கும் ??

பதில்: இதுவரை காலமும் எம்மோடு பொறுப்பான பதவிகளில் இருந்தவர்கள் நடமுறைப் படுத்தியிருந்தார்கள். எனவே அவர்கள் தமது பணிகளையும் கவனித்துக்கொண்டு இவற்றைச் செய்ய வேண்டியிருந்தது. ஆனால் தற்போது கூடிய நேரத்தைத் தம்மிடம் வைத்திருக்கக் கூடியவர்கள் எம்மோடு இணைந்து நடவடிக்கை எடுக்க முன் வந்துள்ளார்கள். எனவே கூடிய விரைவில் நடவடிக்கை எடுப்போம்.

கேள்வி : வடக்கு மாகாண சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற, வடக்கு மாகாணத்தில் உள்ள சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டத்துக்கு நீங்கள் செல்லவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளதே ?

பதில்: அந்தக் கூட்டத்திற்குக் கடைசி வரை நான் போவதாக இருந்தேன். ஆனால் எனது தனிப்பட்ட காரணங்களுக்காக என்னால் அங்கு செல்ல முடியவில்லை. எனினும் அது தொடர்பாக அவைத் தலைவருக்குக் கடிதம் எழுதியிருந்தேன். அதாவது நீங்கள் முடிவுகளை எடுங்கள் அவற்றுக்குச் செயல் வடிவம் கொடுக்கும்போது நான் முதலமைச்சர் என்ற வகையில் அனைத்தையும் செய்வேன் என குறிப்பிட்டிருந்தேன்.

கேள்வி : யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் இராணுவத்தின் செயற்பாடு இருக்கக் கூடாது என யாழ்.மாநகர சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருந்தது. அத்துடன் மாகாண சபையிலும் இது தொடர்பாக பேசப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையில் நேற்றைய தினம் மர நடுகை நிகழ்வின்போது இராணுவத் தோடு இணைந்து நீங்கள் அதில் பங்குபற்றியுள்ளீர்களே ??

பதில் : வடக்கு மாகாண ஆளுநர், யாழ். மாநகர சபை மேயர் இராணுவத்தோடு சேர்ந்து இந்த நடவடிக்கைளை முன்னெடுத்திருந்தனர். இந்த நேரத்தில் அதனைப்புறக்கணித்தால் அது எங்கள் மக்களை தான் தாக்கும். மேலும் எல்லா விடயங்களையும் நாம் அரசியல் ரீதியாக பார்க்கக்கூடாது. எமக்கு வருகின்ற நன்மைகளையும் நாம் பார்க்கவேண்டும். அத்தோடு இராணுவமே மரங்களை வெட்டியது. எனவே அவர்களே அதனை நாட்டி தரட்டும்.

எனினும் இந்தச் செயற்திட்டமானது என்னிடம் பேசப்பட்டு எங்களூடாகச் செய்யப்பட்டிருந்தால் நான் நிச்சயம் இதற்கு இடம்கொடுத்திருக்கமாட்டேன்.

கேள்வி : நீங்கள் புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்க போவதாக பரவலாகப் பேசப்படுகின்றதே ?

பதில் : நானும் அவ்வாறு தான் கேள்விப்பட்டேன். அந்தளவே எனக்கும் தெரியும். எதற்கும்பொறுத்திருந்துபார்ப்போம்.

கேள்வி : தமிழ் மக்கள் பேரவை அடுத்த மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுமா ?

பதில் : பேரவை சார்பில் ஒருவரையும் நியமிக்கமாட்டோம். ஆனால் பேரவையின் அனுசரணையில் யாராவது முதலமைச்சர் வேட்பாளராக வரக்கூடும்.

கேள்வி: நீங்கள் புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பான முன்னேற்றம் இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றதே ?

பதில் : முன்னேற்றம் ஒன்று நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றது. ஆனால் அது கட்சி ரீதியானது என நான் பார்க்கவில்லை.

கேள்வி : அடுத்த மாகாண சபை தேர்தலில் நீங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுவீர்களா ?

பதில் : 2013ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபையின் தேர்தலில் போட்டியிடுவேன் என்பது அதற்கு மூன்று மாத காலத்திற்கு முன்பு தான் தெரியும். எனவே அது அது அந்தந்த நேரத்தில் நடந்துள்ளது.

இந்நிலையில் தற்போது இது தொடர்பாக உறுதியாக எதனையும் கூற முடியாது. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அடுத்த மாகாண சபைதேர்தலில்போட்டியிடுவதா இல்லையா என்பது தொடர்பாக உரிய நேரத்தில் உரிய பதிலை கூறுவேன். - என்றார். (ஐ-7)

## பிரதிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குப் பிரதிச் சபாநாயகர் பதவியை வழங்குவதே பொருத்தமானது என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் சபையில் யோசனை முன்வைத்தார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மஹிந்த ஆதரவு கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்காது வெளியேறினர்.

இரகசிய வாக்கெடுப்பில் ஐக்கிய தேசிய முன்னணியின் மொனராகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த குமாரசிறி 97 வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே 53 வாக்குகளையும் பெற்றனர்.

அதனடிப்டையில் 29 ஆவது பிரதிச் சபாநாயகராக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த குமாரசிறி தெரிவாகினார்.

சபாநாயகர் கரு ஜயசூரிய ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நாயகராக ஆனந்தகுமாரசிறி எம்.பி. தெரிவானதையடுத்து அவருக்குவாழ்த்துத்தெரிவித்து உரையாற்றிய பிரதமர், ''இலங்கையில் ஜனாதிபதி, பிரதமர், பிரதி பிரதமர் ஆகிய பதவிகளில் பெண்கள் இருந்துள்ளனர். எனினும், சபாநாயகர் பதவிக்கே இன்னும் பெண்ணொருவர் தெரிவாகவில்லை. எதிர்காலத்தில் அது நடக்க வேண்டும்". - என்று கூறினார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் தமதுரையின்போது கருத்து வெளியிட்ட சபாநாயகர் கருஜய சூரிய, தனது பிரார்த்தனையும் அதுவாகவே இருக்கின்றது என்று கூறினார்.

அதேவேளை, புதிய பிரதி சபாநாயக்கருக்கான இரகசிய வாக்கெடுப்பில் தனக்கு ஏற்பட்ட தோல்வியானது பெண்களுக்கு ஏற்பட்ட தோல்வி யாகும் என சுதர்ஷினி பெணினாண்டோ புள்ளே எம்.பி. தெரிவித்தார்.

## 118 பேரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) காரம் தொடர்பில் நாடாளுமன்றத்திலும் நேற்று சூடான வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றன.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்தி ய ஜனாதிபதி ஆணைக் குழுவின் இறுதி அறிக்கையில் பகிரங்கப்படுத்தப்படாத ஆவணங்கள் நாடாளுமன்றத்தில் நேற்று சமணிப்பிக்கப்படும் என எதிணிபார்க்கப்பட்ட போதிலும் அவை முன்வைக்கபடாததாலேயேபெரும்அமளிஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்று சபாநாயகர் அறிவிப்பு வேளையின்போது, பிணைமுறி மோசடி ஆவணங்கள் தொடர்பில் அறிவிப்பொன்றை விடுத்த அவர்,

"பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையுடன் தொடர்புடைய சில ஆவணங்கள் வெளியிடப் படாததால் அது தொடர்பில் மக்கள் மத்தியில் பல கோணங்களில் கருத்துகள் பரப்பப்பட்டு வருகின்றன. இதில் சிலர் போலியான தகவல்களை முன் வைப்பதால் நாடாளுமன்றத்துக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், நாட்டுக்கும் பெரும் அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது. இது கவலைக்குரிய விடயமாகும். எனக்கு சீ 350 - 360 வரையான பக்கங்கள் கிடைத்துள்ளன.

முழுமையான ஆவணங்களின் ஓரங்கமே இது. எனவே, ஆவணங்கள் முழுமையாக கிடைக்கப் பெற்ற பின்னணி அவற்றை நாடாளுமன்றத்தில் சமணிப்பிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். எனவே, இந்த விடயம் தொடணிபில் அனைத்துத் தர ப்பினரும் பொறுப்புடன் செயற்பட்டு, பொறுப்பான வகையில் கருத்துக்களை வெளியிட வேண்டும்" - என்று கூறினார்.

இதையடுத்து ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி ய பொது எதிரணியின் எம்.பி யான விமல் விரவன்ஸ, "118 பேரின் பெயர்களையும் வெளியிடுமாறு உத்தியோக பூர்வமாக கோரிக்கை விடுத்திருந்தேன். தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பக்கங்களில் அந்தப் பெயர்கள் இருக்கின்றனவா?'' என்று கேட்டார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், "நான் இன்னும் பார்க்கவில்லை. எனக்குத் தெரிந்த மட்டில் அப்படியொன்றும் இல்லையென்றே கூற வேண்டும்" - என்றார்.

அதன் பின்னணி கருத்து வெளியிட்ட சபை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, ''இந்த விடயத்தில் உண்மை கண்டறியப்பட வேண்டும். சபாநாயகருக்கு சீ - 350 தொடக்கம் 360 வரையான ஆவணங்களே அனுப்பப்பட்டுள்ளன. 1 முதல் 249 வரையான ஆவணங்கள் அனுப்பப்படவில்லை. அனைத்து ஆவணங்களும் அம்பலப்படுத்த ப்படவேண்டும். தெரிவு செய்து, பக்கங்களை அனுப்புவது தவறு" - என்றார்.

இதன் போது எழுந்த ஜே.வி.பியின் தலைவரான அநுரகுமார திஸாநாயக்க எம்.பி., "10 பக்கங்களே அனுப்பப் பட்டுள்ளன. அப்படியானால் 1 முதல் 249 வரையான ஆணவங்களும் சமர்ப்பிக் கப்படும் என்றஉத்தரவாதத்தை சபாநாயகரால் வழங்க முடியுமா? ஏனெனில், இந்த விடயத்தைக் காரணம் காட்டி, 10 பக்க ஆவணமும் மூடிமறைக் க ப்படலாம்". - என்று சுட்டிக் காட்டினார்.

"இது சம்பந்தமாக ஜனாதிபதி செயலாளருடன் பேசுகின்றேன் என்பதை மட்டுமே தற்போது என்னால் கூற முடியும்" என்று சபாநாயகர் பதிலளித்தார். அவ்வேளையில் மறுபடியும் கேள்வியொன்றை எழுப்பிய விமல் வீரவன்ஸ எம்.பி.,

"எதற்காக ஆவணங்கள் கட்டங்கட்டமாக வெளியிடப்படுகின்றது? முழு ஆவணங்களும் வெளியிட ப்படவேண்டும். எதிர்காலத்தைக் காட்டி ஏமாற்ற முற்படவேண்டாம்" என்று குறி ப்பிட்டார்.

இவ்வாறு பிணைமுறி மோசடி விவகாரம் சூடுபிடிக்கையில் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி யான நளின் பண்டார, "100 நாட்கள் ஆட்சியின்போது ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் 42 பேரே இருந்தனர். எனவே, அனைத்து விவரங்களும் வெளியிட ப்பட வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

அதன்பின்னணி கருத்து வெளியிட்ட பொது எதிரணியின் எம்.பியான மஹிந்தானந்த அளுத்கமகே, ''அலோசியஸிடம் இருந்து பணம் பெற்றவர்களைக் கோப்குழுவிலிருந்து நீக்குமாறு கேட்டிருந்தோம். இன்று விபரங்கள் சமர்ப்பிக்கப்படும் என்றும் நம்பினோம். அலோசியஸால் வழங்கப்பட்ட காலோசயை மாற்றிய 24 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சி.ஐ.டியினரால் விசாரிக்கப்பட்டுள்ளனர். கோப் குழுவிலுள்ள உறுப்பினர்களும் இதில் உள்ளடங்குகின்றனர்.

பொது எதிரணியின் சார்பில் நானும், ஜயந்த சமரவீர எம்.பியும் கோப் குழுவில் அங்கம் வகிக்கின்றோம். எனவே, அலோசியஸிடமிருந்து பணம் எதுவும் வாங்கவில்லை என்பதை சத்தியக் கடதாசியொன்றின் ஊடாக உறுதிப்படுத்துகின்றோம்" எனக் கூறி அதை சபையில் சமணிப்பித்தார்.

இதற்கு ப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் அஜித் பி. பெரேரா, "குற்றச்சாட்டுக்குள்ளான வணிகள் கோப் குழுவில் இருக்க முடியாது என்பதே தமது நிலைப்பாடு என மஹிந்தனந்த அளுத் கமகேவும், ஜயந்த சமரவீரவும் கூறுகின்றனர். இவர்கள் இருவருக்கு எதிராகவும் குற்றவியல் குற்ற வழக்கு இருக்கின்றது.

எனவே, குற்றவியல் வழக்கு உள்ளவர்களை எந்தவொரு குழுவுக்கும் நியமிக்கப்படக் கூடாது" என்றார்.

இதற்குப் பதிலடி கொடுத்த மஹிந்தனந்த எம்.பி., "சி.ஐ.டியினரால் விசாரிக்கப்பட்ட 24 பாதுகாப்பு அதிகாரிகளில் அஜித் பி. பெரேராவின் பாதுகாப்பு உத்தியோகத்தணிகளும் அடங்குகின்றனர்" என்று குறிப்பிட்டார். அதை அஜித் பி. பெரேரா நிராகரித்தார்.

அதன்பின்னணி அலோசியஸிடமிருந்து தான் பணம் பெறவில்லை என்ற சத்தியக் கடதாசியை சுசந்த புஞ்சிநிலமே எம்.பி. சபையில் சமர்ப்பித்தார்.

மரிக்கார் எம்.பி., வாசுதேவ நாணயக்கர எம்.பி., காஞ்சன லொக்குகே எம்.பி., அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகியோரும் அலோசியஸிடம் பணம் பெற்றவர்களின் விபரங்களை வெளியிட வேண்டும் என வலியுறுத்தினர்.

"முழுமையான ஆவணங்கள்கிடைக்கப்பெற்ற பின்னணி சபையில் சமர்ப்பிக்கின்றேன்" என்றார் சபாநாயகர். இவ்வாறு 20 நிமிடங்கள் வரை சபையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

## மாட்டுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா சூடுவெந்தபுலவுப் பகுதியில் நேற்றுக் காலை இந்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றது.

துரைச்சாமி திருநாவுக்கரசு (வயது - 53) என்ற நபரே உயிரிழந்தார். அவருடன் பயணித்த பொன்னம்பலம் ஜெயக்குமார் (வயது -48) படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வேலைத்தளத்துக் குப் பயணித்த போதே இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ -100)

## கோட்டாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) போது, சில பேச்சாளர்கள் வெளிப்படுத்திய கருதுக்களுடன் இணங்க முடியாது. கூட்டு எதிரணியில் உள்ள சிலர் அவருடன் இணங்கிப் போகின்றனர்.

மஹிந்த பிரதமராக நியமிக்கப்பட வேண்டும். ஜனாதிபதி இது தொடர்பாக முடிவு செய்ய வேண்டும். என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## கேப்பாபுலவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விடுவிப்புக்காகப் போராடிக் கொண்டிருக்கும் மற்றும் படையினர் வசம் உள்ள காணி உரிமையாளர்களின் விருப்பம் அறியும்கூட்டம் ஒன்று முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடந்தது.

கேப்பாபுலவில் படையினர் வசம் உள்ள காணி உரிமையாளர்கள் சிலர் தங்கள் காணியைப் படையினருக்கு வழங்கி நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கு மீள் குடியேற்ற அமைச்சிடம் சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிலையில் அந்தக் காணி உரிமையாளர்களிடம் எழுத்துமூலம் விருப்பத்தைப் பெற்றுக்கொள்ளும் கூட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலக மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலாளர் இ.பிரதாபன் தலைமையில் நடைபெற்றது. இதில் கரைதுறைப்பற்றுப் பிரதேச காணிப்பகுதி அதிகாரி சோ.சேந்தனும் பங்கேற்றார்.

இந்தக் கூட்டத்தில் 37 காணி உரிமையாளர்கள் கலந்து கொண்டு தங்கள் விருப்பத்தை தெரிவித்துள்ளனர். இதில் இரண்டு காணி உரிமையாளர்கள் வெளிநாட்டில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களில் பெருமளவானவர்கள் தங்களுக்குக் காணிதான் வேண்டும் என்பதை வலியுறுத்தினர். ஆயினும் 05 காணி உரிமையாளர்கள் தங்களுக்குக் காணிக்குரிய நட்டஈடு வழங்குமாறும் விருப்பம் தெரிவித்துள்ளனர். (ஐ)

# சத்தமே இல்லாமல் சாதனை



ரென்னிஸ் அரங்கில் சத்தமே இல்லாமல் சாதனை புரியும், ‘சைலன்ட் வின்னர்’ என வர்ணிக்கப்படும் சிமோனா ஹெலப், தற்போது பிரான்ஸ் பகிரங்க ரென்னிஸ் தொடரிலும் ஜொலிக்க தொடங்கிவிட்டார்.

உலகின் முதல் நிலை வீராங்கனையான ரோமேனியாவின் சிமோனா ஹெலப், உலக ரென்னிஸ் இரசிர்கள் மத்தியில் பெரிதும் பேசப்பாடாவிட்டாலும் அவர் சாதித்தவை ஏராளம்.

ஆனால் ரென்னிஸ் தொடரில் மகத்தான தொடராக கருதப்படும் கிராண்ட்ஸ்லாம் தொடரில் அவர் இம்முறை சாதிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் விளையாடுகின்றார்.

அதற்கு என்ன காரணம் என கொஞ்சம் ஆராய்ந்துப் பார்த்தால், பின்னணயில் ஒரு கசப்பான பதிலைக் கோபத்துடன் கூறுகிறார் ஹெலப்.

இன்று பிரான்ஸ் மண்ணில் களமாடி, வெற்றிகள் பலகண்டு சாதித்து, முன்னேறி வரும் ஹெலப் கடந்த வருடம் இதே பிரான்ஸ் பகிரங்க ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் ஆயிரம் ஆயிரம் கனவுகளுடன் களம் புகுந்தார்.

தொடர் வெற்றிகளின் பூரிப்பிலிருந்த அவருக்குத்தான் கிண்ணம் என்று விளையாட்டு இரசிகர்கள், விற்பனர்கள், என பலரும் எதிர்வுக் கூறியிருந்தார்கள்.

ஆனால் அத்தனையும் பொய்த்துவிட்டது. ஓர் இளம் வீராங்கனை அவரது கனவைக் கலைத்தார். ஹேலப்பின் கிண்ணக்கனவைச் சிதைத்து, புதுவரலாறு படைத்தார் லாத்வியாவின் இளம் வீராங்கனையான ஜெலினா ஒஸ்டாபென்கோ.

இந்த தோல்வியின் வலியும், வேதனையும் வார்த்தகளால் வர்ணித்துவிட முடியாது. எதிர்ப்பார்த்த கிண்ணம் எதிர்த்து போட்டியிட்டவரின் கைகளில் தவழ, இவரோ கண்ணீர் மழையில் நனைந்திருந்தார். இதனை அவர் மாத்திரமல்ல, அவரது இரசிகர்களும் மறந்திருக்க மாட்டார்கள்.

உள்ளம் குமுற, இதயம் படபடக்க தன் கைநழுவிச் சென்ற அந்த உயரியக் கிண்ணத்தை மீண்டும் முத்தமிடும் முயற்சியில் ஹெலப் முனைப்பு காட்டுகிறார்.

ஒருவருட காத்திருப்பு, கடும் பயிற்சி என்ற பல தடைகளையும் தாண்டி மகுடம் என்ற அந்த மகத்தான பெயருக்காக இந்த வருடம், சாதிக்க வேண்டுமென்ற துடிப்போடு களமிறங்கி, வெற்றி வீராங்கனையாக களமாடி வருகிறார் ஹெலப்.

கடந்த வருடம் இறுதிப்போட்டியில் விளையாடி கிண்ணத்தை நழுவவிட்ட அந்த கைகளும், துள்ளி குதித்து விளையாடிய அவரது கால்களும் மீண்டும் பிரான்ஸ் மண்ணை தொட்ட தால்புத்துணர்ச்சிபெற்றுள்ளது.

கிரிக்கெட் பாணியில் மட்டையை சுழற்றி அடித்து, எதிரணி வீராங்கனைகளை சுழல வைக்கும் அற்புத திறன் கொண்ட சிமோனா ஹெலப், தற்போது பரிஸில் நடைபெற்று வரும் பிரான்ஸ் பகிரங்க ரென்னிஸ் தொடரில் காலிறுதி வரை முன்னேறி இருக்கின்றார்.

அனுபவம் வாய்ந்த, ஆக்ரோஷமான வீராங்கனையாக அவரே உள்ள நிலையில், அவரே பெண்கள் பிரிவில் கிண்ணம் வெல்வார் என்றும் இந்த முறையும் கணிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# டேவிட் வில்லாவை பின்னுக்கு தள்ளிய சேத்ரி


சர்வதேச அளவில் அதிக கோல்களை அடித்த வீரர்களின் பட்டியலில் மூன்றாமிடத்தில் இருந்து வந்த டேவிட் வில்லாவை பின்னுக்குத் தள்ளி, இந்திய உதைபந்தாட்ட அணித் தலைவர் சுனில் சேத்ரி மூன்றாவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

இந்தியாவில் நடைபெற்றுவரும் ‘இன்டர்கான்டினன்டல்’ (கண்டங்களுக்கு இடையிலான) உதைபந்தாட்ட தொடரில் மும்பையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் இந்தியா, கென்யா அணிகள் மோதின.

இப்போட்டியில் சுனில் சேத்ரி (68, 90+2ஆவது நிமிடம்) இரண்டு கோல் அடித்து கைகொடுக்க, இந்திய அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் சர்வதேச அளவில் அதிக கோல்களைப் போட்ட தற்போதைய உதைபந்து வீரர்கள் பட்டியலில், 59 கோல்களை இதுவரை போட்டு மூன்றாமிடத்திலிருந்து வந்த டேவிட் வில்லாவை பின்னுக்குத் தள்ளி, இந்திய கால்பந்தாட்ட அணி வீரரும் தலைவருமான சுனில் சேத்ரி 61 கோல்களை அடித்து மூன்றாவது இடத்துக்கு முன்னேறினார்.

இப் பட்டியலில் போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ 81 கோல்களை போட்டு முதலிடத்திலும் ஆர்ஜென்



டினாவின் லயோனல் மெஸ்ஸி 64 கோல்களையும் போட்டு இரண்டாவது இடத்திலும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆப்கனிடம் மண்டியிட்ட பங்களாதேஷ் அணி



பங்களாதேஷ் – ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இவ்விரு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகளை கொண்ட ரி – 20தொடரின் முதல் போட்டி உத்தர காண்ட் தலைநகர் டேராடூனில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் ஆடிய ஆப்கானிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களை எடுத்தது. சோத் 40, சமினுல்லா 36 ஓட்டங்களை விளாசினர்.

167 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 19 ஓவர்களில் 122 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதனால் ஆப்கானிஸ்தான் 45 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

ஆப்கானிஸ்தானின் நட்சத்திர வீரர் ரஷீத்கான் 13 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதேபோல பூர் சர்தான் 3 விக்கெட்டுக்களையும் முஹமது 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.




# சாதிக்குமா ஜேர்மனி?

கால்பந்து களத்தில் பம்பரமாய் சுழன்று, ஆக்ரோம் கலந்த தாக்குதல் பாணியில் இரசிகர்களை சுண்டியிலுக்கும் ஜேர்மனியர்களுக்கு, கால்பந்து விளையாட்டில் இரசிகர்கள் அதிகம்.

இதுவரை நான்கு முறை உலகக் கிண்ணத்தை ஏந்திய பெருமைக்குரிய ஜேர்மனி, இம்முறையும் கிண்ணத்தை ஏந்தாமல் விட்டுவிடுமா என்ன?

நடப்புச் சம்பியனான ஜேர்மனி அணி, இம்முறை அதிரடி மாற்றம் கலந்த, பலம் வாய்ந்த அணியை அறிவித்துள்ளது.

உலகக்கிண்ண கால்பந்து தொடர் ஆரம்பமாவதற்கு இன்னமும் 10 நாள்களே மட்டும் உள்ள நிலையில், இரசிகர்களின் எதிர்பார்ப்பு சற்று பூர்த்தியாகியுள்ளது என்றே கூறலாம். ஆம்! உலகக்கிண்ணக் கால்பந்து தொடரில் விளையாடவுள்ள நடப்பு சம்பியன் ஜேர்மனி அணி வீரர்களின் விவரம் அறிவிக்கப்பட்டது தான் அந்த எதிர்பார்ப்பு.

இந்த எதிர்பார்ப்பு முழுமையாக இரசிர்களை திருப்திப்படுத்தவில்லை என்பதையும் நாம் சுட்டிக்காட்டியே ஆக வேண்டும். அதுதான் உலகக்கிண்ண தொடருக்கான 23 பேர் கொண்ட ஜேர்மனி அணியில் தாக்குதல் ஆட்டத்தில் சிறந்த நடுகள வீரரான லராய் சானேவுக்கு அணியில் இடம் கிடைக்காதது.

பல வெற்றிகளுக்கு துணை நின்ற அவர், தற்போது அணியில் உள்வாங்கப்படாதது இரசிகர்களை கடும் அதிருப்தியடைய வைத்துள்ளது.

இதேவேளை, கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் காலில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக எந்த போட்டியிலும் விளையாடாமல் இருந்த, கோல் காப்பாளர் மானுல் நுவர் மீண்டும் அணிக்கு உள்வாங்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் ஆஸ்திரியாவுக்கு எதிரான பயிற்சி போட்டியில், களமிறங்கி தனது உடற்தகுதியை நிருபித்தவே அவர் மீண்டும் அணியில் இடம்பிடித்ததற்கு காரணம்.

ஆனால் மற்றொரு கோல் காப்பாளரான பெர்ட் லினோ அணியிலிருந்து கழற்றி விடப்பட்டே மானுல் நுவர் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டதையும் நாம் இங்கு நினைவு கூர வேண்டும்.

மேலும், முன்னணி வீரர்களான முன்கள வீரர் நில்ஸ் பீட்டர்சன், பின்கள வீரர் ஜோனதன் ஆகியோருக்கும் அணியில் இடம் கிடைக்கவில்லை.

மாற்றம் கலந்த ஜேர்மனி அணி, இந்த முறை ஆட்டம் காணுமா அல்லது ஆட்டம் காட்டுமா என நாம் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்?

காலைக்கதிர் Kalaikkathir








முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமரர் மு. சிவசிதம்பரத்தின் 16 ஆவது ஆண்டு நினைவும், கூட்டணியின் யாழ். மாவட்ட முன்னாள் உப தலைவர் அமரர். சி. நமசிவாயத்தின் 20ஆவது ஆண்டு நினைவும், கூட்டணி அலுவலகத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# அதிகரிக்கும் சூழல் மாசடைவால் எதிர்கால சந்ததிக்கு அச்சுறுத்தல்

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 06

நாட்டில் அதிகரிக்கும் சூழல் மாசடைவுகள் எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக அமையும் என்றும், இதனை கருத்திற்கொண்டு அனைவரும் சூழலை பாதுகாக்க கைகோர்க்க வேண்டும் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கேகாலை நகரில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற சர்வதேச சுற்றாடல் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

சூழல் கட்டமைப்பைப் பாதுகாப்பதற்குத் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுடன், அது எவ்வகையிலும் தவிர்க்கப்பட முடியாத பொறுப்பாகும். சுற்றாடல் தினத்தில் மாத்திரமன்றி வருடம் முழுவதும் செயற்படுத்தப்படும் சூழல் பாதுகாப்புச் செயற்திட்டத்துடன் இணைந்து சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான தமது பொறுப்பை நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள புதிய வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்கள், நாட்டின் எதிர்கால நன்மை கருதியே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் அத்தீர்மானங்களை மேற்கொள்வதற்கு ஏற்படுத்தப்பட்ட தடைகள், நாடு என்ற ரீதியில் நாம் எதிர்நோக்கிய துர்ப்பாக்கியமான நிலைமையாகும்.

நிர்மாணத் துறைக்கு தேவையான



கல், மண், மணல் ஆகியவற்றை பெற்றுக் கொள்வதனால் சூழல் கட்டமைப்பில் தாக்கம் ஏற்படுகின்றது. அபிவிருத்திச் செயற்திட்டங்கள் நாட்டிற்கு முக்கியமாகும் என்பதனால் அதற்கான மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கான மாற்று வழிகளை இனங்காணவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே கடத்தல் மற்றும் ஊழல் மிக்க வர்த்தக செயற்பாடுகளினால் சூழல் கட்டமைப்பு பாதிக்கப்படுவது மாத்திரமன்றிக் கடந்த சில வருடங்களாக உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

ஆகவே ஒரு தினத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாத தொடர்ச்சியான சூழல் பாதுகாப்புச் செயற்திட்டங்கள் அவசியமாகும். அதனை நிறைவேற்ற நாட்டின் சகல பிரஜைகளும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் – என்றார். (ஐ)



தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் மன்னார் நகரில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் சகிதம் இலங்கைப் போக்குவரத்து பஸ்களில் ஏறி 'இலங்கையர் எம் அடையாளம். பன்மைத்துவம் எம் சக்தி, என்ற வாசகங்கள் கொண்ட ஸ்ரிக்கர்கள் ஒட்டினார். (ஐ-112)

# மணல் கடத்தியவருக்கு ரூபா 50 ஆயிரம் தண்டம்

அனுமதிப்பத்திரம் இல்லாமல் சட்ட விரோதமான முறையில் மணலை ஏற்றிச் சென்ற நபரொருவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

யாழ்ப்பாணப் பொலிஸாரால் கடந்த வாரம் அரியாலைப் பகுதியில் சுற்றுக் காவல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்போது அப்பகுதியில் உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிக் கொண்டிருந்த நபரொருவர் பொலிஸாரை கண்டதும் இழுவைப் பெட்டியை கழற்றி விட்டு தப்பிச் செல்ல முற்பட்டுள்ளார்.

பொலிஸார் அவரை வளைத்துப் பிடித்துக் கைது செய்ததுடன் உழவு இயந்திரத்தையும் இழுவைப் பெட்டியையும் கைப்பற்றி நீதிமன்றில் முற்படுத்தினர்.

நீதிமன்றத்தால் சந்தேகநபர் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேகநபர் குற்றத்தை ஏற்றுக்கொண்டார். சந்தேகநபரை 50 ஆயிரம் ரூபா தண்டமாகச் செலுத்துமாறும் மணலை பறி முதல் செய்யுமாறும் நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். (ஐ)

# பிணைமுறி விவகாரம்; ஜனாதிபதி மௌனம்

## சுனில் ஜயரத்ன குற்றச்சாட்டு

மத்திய வங்கிப் பிணைமுறி விவகாரம் தொடர்பில் அனைத்து அரசியல்வாதிகளுக்கும் பணம் வழங்கப்பட்டுள்ள காரணத்தினால் தான் ஜனாதிபதியும் பிரதமரும் இவ் விடயத்தில் அமைதி காக்கின்றனர் என்று தேசிய சுயதொழில் கூட்டமைப்பின் தலைவர் சுனில் ஜயரத்ன குற்றம் சுமத்தினார்.

இந்த விடயம் தொடர்பில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்கு முறைப்பாடொன்றையும் அவர் வழங்கியுள்ளார். அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக இவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நாம் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்கு மத்திய வங்கிப் பிணைமுறி விவகாரம் தொடர்பில் முறைப்பாடொன்றை வழங்கியுள்ளோம். மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி விவகாரத்தில் அர்ஜுன ஆலோசியசிடம் பணம் பெற்றுள்ளோர் பட்டியலில் அமைச்சர் சரத் பொன்சேகாவினதும் முன்னாள் அமைச்சர் தயாசிறி ஜயசேகரவினதும் பெயர்களே இதுவரை வெளியாகியுள்ளன.

இதில் தொடர்புடைய ஏனையோரின் பெயர் விவரங்கள் மறைக்கப்பட்டுள்ளன. இவை வெளியாக இன்னும் 30 வருடங்கள் சரி ஆகும். இந்த குற்றமானது அப்படியே ஒருதலைமுறைக்கு மறைக்கப்பட்டுவிடும்.

எனவே, இதுவிடயம் தொடர்பில் சபாநாயகர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றே இன்று நாம் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளோம் – என்றார்.



# யாழ்.இந்துக் கல்லூரி அணி 5 வருடங்களின் பின் வெற்றி

யாழ்ப்பாணம், ஜுன் 09

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும், யாழ் மத்திய கல்லூரிக்கும் நடைபெற்ற 17 வயதின் கீழ்ப் பிரிவின் கிரிக்கெட் போட்டியில் யாழ் மத்திய கல்லூரி அணியை வீழ்த்தியது. யாழ் இந்துக் கல்லூரி அணி 5 வருடங்களின் பின் வெற்றி பெற்றுள்ளது.

யாழ் இந்துக் கல்லூரி அணி 191 ஓட்டங்களைப் பெற்றது. அணியின் சார்பில் சாஜ்லரூபன் 36 ஓட்டங்களும், கோமைந்தன் 31 ஓட்டங்களும், அங்கவன் 24 ஓட்டங்களும் பெற்றுக் கொடுத்தனர். மத்திய கல்லூரி அணியின் சார்பில் எளிமரசன் 4 விக்கெட்டுக்களையும், விதுசன் 3 விக்கெட்டுக்களையும் எடுத்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி அணி 187 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. அணியின் சார்பில் இந்துயன் 61 ஓட்டங்களும், சதுர்யன் 19 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். இந்துக் கல்லூரி அணியின் சார்பில் அங்கவன் 5 விக்கெட்டுக்களையும், சானுஜன் 3 விக்கெட்டுக்களையும் எடுத்தனர்.

# சுற்றுச் சூழலைப் பாதுகாக்கக் கோரி கொக்காவிலில் நேற்றுப் போராட்டம்!

கிளிநொச்சி, ஜுன் 06

சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு நேற்றுச் செவ்வாய்க்கிழமை சுற்றுச் சூழலைப் பாதுகாக்கக் கோரி கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தது.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று மாலை 4 மணியளவில் கொக்காவில் பகுதியில் இடம் பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்காவில் பகுதியில் அளவுக்கதிகமாக மேற்கொள்ளப்பட்டுள்ள கிரவல் அகழ்வு இடம் பெற்ற பகுதியில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



இந்தப் போராட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவருமான முருகேசு சந்திரகுமார், பிரதேசசபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது சூழல் பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வை வெளிப்படுத்தும் சுலோகங்களையும் மக்கள் ஏந்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.06.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.